முரசொலி

வார இதழ் — மு. கருணாநிதி

முரசு 3 || 5—4—57 வெள்ளி | ஒலி 50

அழைக்கின்றார் அய்யா !

இன்று ஓட்டை விற்பவர்கள் நாளை நாட்டை விற்பார்கள்!

'கல்கி' இதழிலே திருவாளர் பி. டி. ராஜன் அவர்கள் எழுதிய கட்டுரையை இங்கே தந்திருக்கிறோம்.

இந்தக் கட்டுரையை வெளியிட்டு 'கல்கி' ஆசிரியர் பின்வருமாறு எழுதியுள்ளார் :

"தேர்தல் நடந்த முறையைப்பற்றி திரு பி டி. ராஜன் அவர்கள் குறைபட்டிருப்பது போலவே, பலரும் அபிப்பிராயம் கொண்டிருக்கிறார்கள். ஜனநாயகத்தில் மக்கள் நம்பிக்கை இழக்காமல் இருப்பதற்காகவும் பொது மககளுடைய சீலம் பழுதுபடாமல் இருப்பதற்காகவும், காந்தி மகான் வளர்த்த காங்கிரஸ் மகாசபையின் தொண்டர் கூட்டம் தன்னுடைய நல்ல பெயரை மீண்டும் பெறுவதற்காகவும், நேருஜி அவர்கள் ஒரு பகிரங்க விசாரணைக் கமிட்டி ஏற்படுத்தித் தேர்தலில் நடைபெற்ற குறைபாடுகளை விசாரிக்க வேண்டும். இது கால தாமதமின்றிச் செய்யப்பட்டால் தேர்தலில் சட்டமும் நீதியும் நிராகரிக்கப் பட்டது பற்றிய போதிய சான்றுகள் கிடைக்கும்."

ஜனநாயக ஆட்சி முறையில் பொது மக்களுக்கு உண்மையாகக் கொடுக்கப்பட்ட உரிமை வாக்குரிமை ஒன்றுதான். அந்த உரிமையையும், நமது அரசியல் சட்டப்படி ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறைதான் நாம் உபயோகிக்க முடியும். அத்தகைய மதிப்பு வாய்ந்த ஒரு உரிமையை மக்கள் ஒவ்வொருவரும் எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்று அவர்களுக்கு நல்ல முறையில் விளக்கமாக எடுத்துச் சொல்ல வேண்டியதே தேர்தலில் அரசியல் கட்சிகளின் கடமையாகும். இதைக் குறித்தே பிரதமர் நேரு அவர்களும் தேர்தல் பிரச்சாரம் பாமர மக்களுக்கு ஒரு சர்வ கலாசாலைப் படிப்புக்கு ஒப்பானது என்று கூறி வருகின்றார். ஆனால் இப்பொழுது நடைபெற்ற தேர்தலில், ஆட்சியிலுள்ள கட்சியினர் தாங்கள் வெற்றி பெறுவதற்காக என்னென்ன முறைகளைக் கையாண்டார்கள் என்பதைப் பார்த்தவர்கள், நாட்டின் எதிர் காலத்தைப் பற்றி மனம் வருந்தாமல் இருக்க முடியாது.

அபேட்சகர்கள் பணம் கொடுத்து வாக்குகளை வாங்குவதும், வோட்டர்கள் அவைகளை விற்பதும் தேர்தலில் ஒரு சர்வ சாதாரண செய்கையே யாகும் என்று பொது மக்கள் நினைக்கும் அளவுக்கு லஞ்சப் பழக்கம் நாட்டிலே புகுத்தப் பட்டு விட்டது. அத்துடன் பயமுறுத்தல், கொலை, குடி, களவு, தீ வைத்தல் முதலிய செய்கைகளில் ஈடுபடும் அளவுக்குக் கூடப் பல நிகழ்ச்சிகள் சில இடங்களில் நடைபெற்றிருக்கின்றன. மேலும் மக்களிடையே ஜாதி வெறியைத் தூண்டிவிட்டு அதன் மூலம் அவர்கள் ஆதரவைப் பெறும் முறையும் பழக்கத்துக்கு வந்து விட்டது.

மகாத்மா காந்தியின் போதனைகளில் சத்தியம், நேர்மை, குடி ஒழித்தல், அஹிம்சை, ஜாதி வித்தியாசங்களை ஒழித்தல் ஆகியவைகளே முக்கியமானவைகளாகும். இப்போதனைகள், இப்பொழுது நடைபெற்ற தேர்தலில், எந்த அளவுக்குக்கடைப்பிடிக்கப்பட்டன என்பதைப் பார்த்து, மகாத்மா காந்தியின் ஆவி இன்று கண்ணீர் விட்டுக் கொண்டிருக்குமென்பது உறுதி.

இன்று காசைக் கொடுத்து வோட்டை வாங்குபவர்கள், நாட்டுக்கும் மக்களுக்கும் தாங்கள் எவ்வளவு பெரிய தீங்கைச் செய்கிறோம் என்பதைத் தெரிந்து கொண்டார்களோ, இல்லையோ? இன்று காசுக்காக வோட்டை விற்பவர்கள் நாளை காசுக்காக நாட்டையும் காட்டிக் கொடுக்க மாட்டார்களா என்பதை நாம் சிந்திக்க வேண்டும்!

நல்ல ஜனநாயக முறையை மக்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும்; அதன்படி நாமும் நடந்து காட்ட வேண்டும். அப்பொழுதுதான் மக்களிடையே உண்மையான நாட்டுப்பற்று உண்டாகும். ஜனநாயகமும் நல்ல முறையில் வளர்ச்சியடையும்.

ஜனநாயகத்துக்கு இன்றியமையாத ஓர் உறுப்பு ஒரு நல்ல எதிர்க்கட்சியாகும். இன்றைய நிலையில் நமது சென்னை இராஜ்யத்தில் இந்தப் பொறுப்பை ஏற்றுக் கொள்ளத் தகுதி வாய்ந்தவர்கள் தி. மு. கழகத்தினரே. ஆகையால்தான் இத்தேர்தலில் நான் அவர்களை ஆதரித்தேன். அவர்கள் வெற்றியடைய வேண்டுமென்றும் விரும்பினேன். மதச் சார்பற்ற ஒரு ஜனநாயகக் குடியரசு அமைப்பில் மதச் சார்பற்ற கட்சி ஒன்று இருப்பதைக் குற்றமென்று யார் சொல்ல முடியும்? அரசியலுக்கும் மதத்துக்கும் சம்பந்தமில்லை. அரசியல் நாட்டைப் பொறுத்த விஷயம். மதம் தனி மனிதனைப் பொறுத்த விஷயம். ஆகையால் இன்று சட்ட சபைக்குச் சென்றுள்ள திராவிட முன்னேற்றக் கழகத்தினர் சரியான எதிர்க் கட்சியாக இருந்து நல்ல முறையில் பணியாற்றி நாட்டுக்குச்சேவை செய்வார்கள் என்று நம்புகின்றேன். வாழ்க ஜனநாயகம்!

அந்தோ அவலம்; அவலம்!

1920—30 காலத்தில் காங்கிரசில் இவ்வளவு உறுப்பினர்கள் கிடையாது இருந்தாலும் அன்று காங்கிரஸ் ஒரு உயிர்த் துடிப்புள்ள ஸ்தாபனமாக இருந்து வந்தது. இன்றோ அந்த ஸ்தாபனத்திலே அந்த ஆவேசம் இல்லையே!

—இப்படி காங்கிரசின்மீது தாக்குதல் நடத்துவது யார் என்று கேட்கிறீர்களா?

—வேறு யாருமில்லை. பண்டித நேருவே இவ்வாறு விமர்சனம் செய்திருக்கிறார்!

முன்பு காங்கிரஸ் சிற்றுளியாக இருந்தது; பெரும் பெரும் ஆதிபத்திய மலைகளையெல்லாம் தவிடுபொடி செய்யும் திறனைப் பெற்றிருந்தது!

இன்றோ அந்தச் சிற்றுளியின் முனை தேய்ந்துவிட்டது! அதன் பிடியைக் கரையானும் காளானும் சேர்ந்து அரித்து விட்டன!

முன்பு காங்கிரசிலே அங்கத்தினர்கள் குறைவுதான்! ஆனால் அவர்கள் அறிவுலக ஜோதிகளாய்; ஜாதிச் சாக்கடையை நோக்கிக் காறி உமிழும் கர்ம வீரர்களாய்; விடுதலைத் தானையின் தளகர்த்தர்களாய்; தணலாய்; தீப்பொறியாய்; நடமாடும் எரிமலைக் குன்றங்களாக இருந்தார்கள்!

இன்றோ காங்கிரசிலே வேறெந்தக் கட்சியையும்விட அங்கத்தினர்கள் அதிகம்!

அதே போலவே வேறெந்தக் கட்சியையும்விட பண முதலைகளும் வட்டி வேந்தர்களும் அதிகம்!

இன்று காங்கிரஸ் ஸ்தாபனம் பெரிது; மிகப் பெரிது! அதே போலவே ஊழல்—உட்பிளவு—இவைகளும் அங்கே அதிகம்; மிக அதிகம்!

முன்பு அங்கே சிறைக்கஞ்சா சிங்கங்கள் உலவினார்கள்! இன்று அங்கே சிறு நரிகள் ஊளையிடுகின்றன!

முன்பு அங்கே தியாகிகள் இருந்தார்கள்! இன்றோ அங்கே ஜனநாயகத்தைக் குழிதோண்டிப் புதைக்கும் தேசத் துரோகிகள் இருக்கிறார்கள்!

காங்கிரஸ் ஸ்தாபனத்திற்கு அதன் போராட்ட காலங்களிலே இல்லாத அளவு எப்படித் திடீரென்று அங்கத்தினர் தொகை அதிகரித்தது?

சிங்காதனம் ஏறும் இந்த நேரத்திலே வந்து கூடியிருப்பவர்கள் அன்று சிறை செல்லும் நேரத்திலே எங்கு போனார்கள்?

கணக்கிடவில்லை; அதைப் பற்றி எள்ளளவும் சிந்தனையைச் செலுத்தவில்லை காங்கிரஸ் தலைமைப் பீடம்!

கொள்கையை விட்டுக் கொடுத்தது; அதனால்தான் குணக்கேடர்கள் வந்து குடியேறினார்கள்!

சென்னை மாநிலத்திலே மட்டும் காங்கிரஸ் கட்சி 205 அபேட்சகர்களைப் போட்டியிட வைத்தது.

இதில் 75 சதவீதத்தினர் கடைந்தெடுத்த முதலாளிகள்! மீதி 25 சதவீதத்தினரும் முன்பு காங்கிரஸ் போராடிய சமயத்திலே குதிருக்குள் புகுந்து கொண்டிருந்த சந்தர்ப்பவாதிகள்!

இந்த 205 பேரிலே:

மில் முதலாளிகள்—	14
பஸ் முதலாளிகள்—	15
பெருநிலக்கிழார்கள்—	52
பெரும் வியாபாரிகள்—	20

—இப்போது சொல்லுங்கள்;

இப்படிப்பட்ட வடிகட்டிய முதலாளிகள் எல்லாம் கூடி காங்கிரஸ் அங்கத்தினர் பட்டியலை அதிகரித்தால் எப்படி அது உயிர்த் துடிப்புள்ள இயக்கமாக இருக்க முடியும்?

நடமாடும் பிரேதங்களைச் சேர்த்துக் கொண்டிருக்கிறார்கள்; பிறகு நாற்றமெடுக்காமல் என்ன செய்யும்? ❖

வெள்ளி 5—4—57 சென்னை

வீண் விரயம்!

அறிஞர் அண்ணா அவர்கள் சென்னைப் பொதுக்கூட்டத்திலே மிக அழகாக எடுத்துரைத்தார்கள்,

"எதிர்கட்சி எழிலுடையதாக இருக்க வேண்டுமென்றால் ஆளும் கட்சி அறநெறியோடு ஒழுக வேண்டும்" என்று.

உண்மை ஜனநாயகம் இந்த உபகண்டத்திலே தழைத்தோங்க வேண்டுமென்றால் அதைத்தான் நாடவேண்டும்; செய்ய வேண்டும் ஆட்சிபீடத்திலிருப்போர்!

ஆனால் செங்கோல் பிடித்திருப்பவர்களுக்கு இந்த நிலைமை எப்போது வரும்?

சட்டசபையிலே தங்களுக்கு எதிராக உட்கார்ந்துகொண்டிருப்பவர்கள் அடுத்த பொதுத் தேர்தல் முடிந்தவுடன் இந்த இடத்திற்கு வந்தாலும் வரக்கூடும்; இன்று யானைக்கு வந்திருக்கும் காலம் நாளை பூனைக்கும் வரலாம்.

—என்கிற எண்ணம் சிந்தையிலே எழும்பிக்கொண்டே இருக்குமானால்; நாளை தாங்கள் எதிர்க் கட்சியானாலும் ஆகிவிடலாம்—என்ற ஐயப்பாடு உதயமாகிக்கொண்டே இருக்குமேனில் அவர்களை அறியாமலேயே எதிர்க் கட்சியினரின்பால் ஒரு மதிப்பு; அவர்களையும் சமமாகக் கருதிடும் சுபாவம்—இவை அரும்பிடுவதற்கு வழியேற்படும்!

அமெரிக்கா, இங்கிலாந்து—போன்ற நாடுகளிலே அதுதான் இப்போது இருந்து வருகிற நிலைமை!

இன்று செங்கோல் பிடித்திருக்கும் கன்சர்வேட்டிவ் கட்சி நாளை சாதாரண எதிர்க் கட்சியாகிவிடும்!

இன்று எதிர்க் கட்சியாக விளங்கிவரும் தொழிற்கட்சி நாளை ஆளும் தகுதியை வாக்காளர் பெருமக்களிடமிருந்து பெற்றுவிடும்!

—இந்த நிலைமைதான் அங்கே மாறிமாறி இருந்து வந்திருக்கிறது!

ஆனால் இந்த உபகண்டத்திலோ அதுபோன்ற நினைப்பு ஆளும் கட்சியினர் உள்ளத்தில் அரும்பிடுவதற்கே இடமில்லாத நிலையிலே கட்சிகள் நடத்தப்பட்டு வந்திருக்கின்றன; வருகின்றன!

நாளை தாங்கள் எதிர்க் கட்சியாகிவிடுவோம் என்கிற பயம் இல்லை இன்று ஆளும் கட்சியாக இருந்துவரும் காங்கிரசிற்கு! அதனால்தான் பதவி சதமென்று கருதி; தங்களுக்கு யாருடைய உதவியும் தேவையில்லை என்கிற நினைப்பிலே மெய்மறந்து திரிகிறார்கள்; மற்றவர்களை நிமிர்ந்து பார்த்து பேசுவதற்கும் தயங்குகிறார்கள்!

பதவி சாஸ்வதம் என்கிற எண்ணம் எப்படி அவர்கள் மனதிலே வேரூன்றியது? இந்த உறுதிமொழியை அவர்களுக்கு அளித்தவர் எவர்? இதற்குக் காரணம் வேறொன்றுமில்லை; ஓட்டுகளை பணத்தினால் வாங்கி பெட்டியை நிரப்பிக்கொள்ளலாம்—என்கிற நிலை உருவாகி விட்டது!

உலகிலே பலாத்காரத்தை உபயோகித்து பதவியைக் கைப்பற்றும் நோக்கம்கொண்ட கட்சிகள் இருக்கின்றன!

உன்னதக் கொள்கைகளைக் காட்டி; கருத்தைக் கவர்ந்து; அதன் மூலம் பதவியையும் கவரும் அரசியல் அமைப்புகள் இருக்கின்றன!

ஆனால் பணத்தைக்கொண்டு; ஓட்டுக் கொள்முதல் மூலம் ஆட்சியைக் கொள்ளும் அரசியல் கட்சி இந்த அவனியில் காங்கிரசைத் தவிர வேறெதுவுமே இல்லை!

பணபலம் இருக்கிறது; அதனால் அவர்கள் கொள்கை பலத்தை நம்பவில்லை.

பணபலம் இருக்கிறது; அதனால் பதவியை நிரந்தரமாக்கிக் கொள்ளும் வன்மை இருக்கிறது; அதனால் அவர்கள் துணிந்து ஜனநாயக நங்கையைத் துகிலுரிந்து வேடிக்கைப் பார்க்கிறார்கள்!

இந்திய தேசியவாதிகளின் இந்தக் கீழ்த்தரச் செயலுக்கு மிகச் சீரிய உதாரணம்தான் அவர்கள் இப்போது எதிர்க் கட்சிகள் எதையும் கலந்தாலோசிக்காமல் சட்டசபைக் கூடத்தை தற்போது சென்னை மவுண்ட் ரோடு அருகில் இருக்கும் இடத்திலிருந்து கோட்டைக்கு மாற்றுவதாகும்!

இப்போது மவுண்ட் ரோடு பகுதியில் இருந்துவரும் இந்தக்கூடம் சமீபத்தில்தான் பன்னிரண்டு லட்சம் ரூபாய்களைச் செலவழித்து எழுப்பப்பட்டது!

ஆந்திர, கேரள, கன்னட மாநிலங்கள் பிரிந்து சென்றுவிட்டதன் காரணமாக தமிழ் நாட்டு உறுப்பினர்கள் தொகை குறைந்துவிட்டதைக் எடுத்துக் காட்டி இப்போது இடமாற்றத்தைச் செய்கிறார்களாம்!

கோட்டையிலிருக்கும் மண்டபத்தை சட்டசபை கூடுவதற்கு ஏற்ப மாற்றி அமைப்பதற்காக ஐந்து லட்சம் ரூபாய்களைச் செலவழிக்கப் போகிறார்கள்!

மவுண்ட் ரோடு கூடத்திலேயே சட்டசபை கூடினால் புதிதாக ஐந்து லட்சம் ரூபாய்களுக்குச் செலவு ஏற்பட்டிருக்காது!

—ஆனால் காமராசர் ஆட்சியோ இந்த ஐந்து லட்சம் ரூபாய்கள் பொதுமக்கள் வரிப் பணத்திலிருந்து விரயமாக்கப்படுவதாக உணரவில்லை; தேர்தலுக்கு ஓட்டுகளை வாங்குவதற்கு வாரியிறைத்ததைப் போலவே எண்ணிக்கொண்டு இப்போது வரித்தொகையிலே விளையாடுகிறார்கள் கர்ம வீரர்கள்!

மவுண்ட் ரோடு பகுதியிலே இப்போது சட்டசபை அமைந்திருக்கும் இடம் நகருக்கு மையமானது. அதை அவசர அவசரமாக எங்கேயோ இருக்கும் கோட்டைக்கு மாற்றவேண்டிய காரணங்கள் என்ன?

ஒரே ஒரு காரணம்தான்; மக்கள் மன்றத்திலே அதிகத் தொடர்பு வைத்திருக்கும் தி. மு. கழகம் இப்போது முதல் முறையாக சட்டசபைக்குள் நுழைகிறது. அதனால் நகருக்கு மையமான இடத்திலே இருந்தால் சபைக்கு அதிகமான பொதுமக்கள் வருவார்கள்!

எங்கெந்த மந்திரிகள் வந்திருக்கிறார்கள்? எவரெவர் ஊர் சுற்றுகிறார்கள் என்பதை இனி அதி தீவிரமாகக் கணக்கெடுப்பார்கள்!

காமராசர் எத்தனை தடவைகள் வாய் திறக்கிறார்? தேர்தல் நேரத்தில் சண்டமாருதம்போல் சொற்பெருக்கு ஆற்ற முயன்று பார்த்தவர் சபைக் கூடத்திலே ஊமையாகிவிட்டதேன் என்று கேள்விக் கணைகளைத் தொடுப்பார்கள்!

—எதிர்க் கட்சிக்காரர்கள் யாரும் பேசுவதற்கு முன்பாகவே பொதுமக்களே முன்வந்து இவைகளைத் தெரிந்துகொள்வார்கள்!

—இதற்குப் பயந்துகொண்டுதான் காமராசர் இப்போது சட்டசபையைக் கோட்டைக்குத் தூக்கிக்கொண்டு ஓடுகிறார்!

சட்டசபைக் கூடத்திலே இடம் பெறுபவர்கள் யார் யார்? ஆளும் கட்சியினர் மட்டும்தானா?

இல்லை; இல்லை. எதிர்க் கட்சிக்காரர்களும்தான் உட்காருகின்ற உரிமையைப் பெற்றிருக்கிறார்கள் அங்கே!

—பின்னர் அவர்கள் ஏன் இடமாற்றம் குறித்து கலந்தாலோசிக்கப்படவில்லை?

சென்ற டிசம்பர் 27-ம் தேதியன்றே இது குறித்து கேட்டபோது; சட்டசபையின் இடம் மாற்றம் அவசியமென்று கருதப்பட்டால் அது பற்றி புதிய சட்டசபை உறுப்பினர்களின் கருத்தும் அறிந்துகொள்ளப்படும்—என்று பொறுப்பான அமைச்சர் ஒருவரே உறுதியளித்திருக்கிறார்!

அந்த உறுதிமொழி இப்போது எங்கே போயிற்று?

—வினாக்கள் வெடித்துக் கிளம்புகின்றன; மக்கள் மன்றத்தில்!

காமராசரே! ஐந்து லட்சம் ரூபாய்களை ஏன் விரயமாக்குகிறீர்?—என்று எரிமலையெனக் குமுறுகிறது நல்லவர் உள்ளம்!

இன்றில்லாவிட்டால் நாளை அவர்கள் பொதுமக்கள் முன்பாக இந்த வீண் வேலைக்குப் பதில் கூறித்தான் ஆகவேண்டுமென்று எச்சரிக்க விரும்புகிறோம், இழிதகை வேலையில் ஈடுபட்டிருக்கும் ஆளவந்தார்களைப் பார்த்து!

ஃ

ஏன்?

காமராசருக்காகவே காங்கிரசை ஆதரிப்பதாகக் கூறுகிற திராவிடர் கழகத்தார் காமராசர் தொகுதிக்குச் சென்று அவரை ஆதரித்துப் பேசவில்லையே ஏன்?

ஏப்ரல்
12உ
முதல்
சரவணபவா & யூனிட்டியின்
வணங்காமுடி
டைரக்ஷன்
P. புல்லையா, B.A.

9

யமுனையாற்றின் தண்ணீர் செந்நீராக ஓடியது; அரசி ருசியாவே அரசாங்கப் படைகளுக்குத் தளபதியாக நின்று போர் நடத்தினுள். ருசியா எவ்வளவுதான் சாமர்த்தியமாகப் பேசினுலும் ஓம்ராக்களில் பலர் கலகக்காரர்களின் பக்கம் சேரத்தான் செய்தனர். போர் கடுமையாகவே இருந்தது. கரங்களில் வாள் மின்ன, கண்களில் வீரம் வெளிப்பட, நெஞ்சத்தில் கொஞ்சமும் துணுக்கின்றி, பெண் ருசியா களததில் காட்டிய தீரம் பேடிகளையும் வீறு கொண்டு எழச் செய்தது. முதல்நாள் போர் யாருக்கும் வெற்றி தோல்வியின்றி முடிந்தாலும், அரசியின் படைகளுக்கு பயங்கரமான சேதம் விளைந்திருந்தது.

அன்று இரவு அரசி பாசறையில் அயர்ச்சியோடு வீற்றிருந்தாள். அவள் முகத்தில் சிந்தனை தேங்கிக்கிடந்தது தூரத்தில் உயிரற்ற உடல்களைப் பதம் பார்க்கும் நரி, ஓநாய்களின் ஊளையும் குற்றுயிர் குலை உயிராய்க் கிடப்போரின் கோரமான முனகல் சப்தமும் இரவின் அந்தகாரத்தைக்கிழித்துக் கொண்டு பயங்கரமாக ஒலித்தது. ருசியாவின் உள்ளம் வேதனைப்பட்டது.

"யாருக்காக இந்தப் போர்? தாய்க்குலம்தரணியாளும்தகுதியற்றது என்ற எண்ணம் நிலைபெற இவ்வளவு பெரிய பயங்கரப் படுகொலையா? அல்லது இரு உள்ளங்களில் முகிழ்த்த காதலைக் கருக்கி விட்டதற்கு நான் கொடுக்க வேண்டிய அபராதமா? அல்லது என் ஆசையை நிறைவேற்ற முயன்று தோல்வி கண்டதற்காக அளிக்கப்படும் தண்டனையா? நாட்டு மக்களின் நல்வாழ்வுக்குச் செய்யப்பட வேண்டிய காரியங்கள் எவ்வளவோ இருக்க, இந்த நாசவேலை ஏன்? என் சுயநலம், சொந்த கௌரவம் காப்பாற்றப்பட எவ்வளவு பெரிய உயிர்த் தியாகம்..."

உடலை ஆணுடை மூடி மறைத்திருந்தாலும், அழிவுச் சக்திகளின் கோரத் தாண்டவத்தைப் பார்த்தபின், அதன் குமுறல்களைக் காதுகளால் கேட்டபின், பெண்மையுணர்ச்சி ருசியாவின் உள்ளத்திலிருந்து பீறிட்டு எழத்தான் செய்தது. அவள் கண்களிலிருந்து கண்ணீர் பெருக்கெடுத்துக் கன்னங்களை நனைத்தது.

பாசறையை விட்டு எழுந்து மெதுவாக வெளியே நடந்தாள். மயான அமைதியில், வேதனைக் குரல்கள் அவள் இதயத்தை வேல் கொண்டு தாக்கின. அதைக் கேட்கச் சகிக்காமல் நடையை வேகமாகப் போட்டாள். சில மைல்களுக்குப்பால் எதிரிகளின் பாசறையில் விளக்கு 'மினுக் மினுக்' கென்று ஒளி விட்டுக் கொண்டிருந்தது. எண்ணங்களில் மூழ்கியவளாய் ருசியா நடந்து சென்று கொண்டேயிருந்தாள் களைத்துப்போய், யமுனை நதியின் நீரில் கால்களை விட்டுக் கொண்டபடியே அமர்ந்தாள். ஆற்றின் 'சல, சல' ஒலியும் வானத்தில் நீந்திச் செல்லும் பிறை நிலவின் அழகும், அலைபாயும் அவள் உள்ளத்திற்கு ஆறுதல் அளித்தது. அப்படியே மெய் மறந்து வீற்றிருந்தாள்.

யாருடைய கரங்களோ திடீரென்று தோளைத் தொடுவதை உணர்ந்தாள்; திரும்பிப் பார்த்தாள்! அழகே உருவான ஆண்பிள்ளை யொருவன் இராணுவ உடையில் கம்பீரமாக நின்று கொண்டிருந்தான். தான் செய்து விட்ட மகத்தான தவறை அப்பொழுதுதான் ருசியா உணர்ந்தாள்.

"யாரப்பா நீ?"—கர்ஜித்தான் வந்தவன்.

"என்னைப் பார்த்தால் தெரியவில்லையா?" என்ருள் ருசியா.

சற்று சமாளித்துக்கொண்டு, "நன்ருகத் தெரிகிறது, ஆணுடையில் வந்திருக்கும் பெண் என்று!"

வந்தவனுடைய விழிகள் ஆணுடையில் மறைந்திருக்கும் பெண்மையைப் பரிசீலித்துக் கொண்டிருந்தன.

ருசியாவின் உடல் நடுங்கியது. இனி, அவள்தான் அரசி ருசியா என்பதை எப்படி மறைக்க முடியும்? ஆனுலும் நெருக்கடியான நிலையில் தானே அறிவின் துணையும் சாதுரியமும் நிரம்ப வேண்டும்!

"அது கிடக்கட்டும், நீ யார்?" என்று கேட்டு வைத்தாள்.

"நான்தானே, அல்தூனியாவின் தளபதிகளில் ஒருவன். அலாவுதீன் என்பது என்னுடைய பெயர். விஷயத்தை மறந்து விட்டாயே, நீ யார் என்பதை இன்னமும் சொல்லவில்லையே!"

"அடடே......நான்தானே! நான்...நான் ருசியா பீகத்தின் பணிப் பெண்..."

"ஓகோ, பமீயாவா...?"

"பமீயாவா? அவளை உனக்கெப்படித் தெரியும்?"

"எங்கள் போர்த் தளபதி யாகூத் எப்போதும் பூஜித்து வரும் இஷ்ட தேவதையல்லவா பமீயா! அவர் அல்தூனியாவிடம் எப்பொழுதும் அவளைப் பற்றியே தான் பேசிக் கொண்டிருப்பார்......அப்படியானுல் நீ பமீயா இல்லையா?"

"நான் பமீயா இல்லை; என் பெயர் சலீமா!"

"சலீமா, இப்படி உட்கார்; நான் உன்னிடம் நிறையப் பேசவேண்டும்"

"இல்லை; இல்லை; நான் பாசறைக்குப் போக வேண்டும். பீகம் விழித்துக் கொண்டால் என்னைத் தேடுவார்கள்..."

"உங்கள் பீகம்கூட உன்னைப்போல் ஆணுடையில் தானே இருப்பார்களாம்!"

"ஆமாம்" என்று கூறியபடியே நகர்ந்தாள். அலாவுதீனே, அவள் கரத்தைப் பற்றிப் படிகளில் அவளை அமர்த்தி அவள் அருகிலேயே அவனும் உட்கார்ந்து கொண்டான். அவளுக்கும் அவனோடு பேசிக் கொண்டிருந்தால் ஆறுதல் கிடைக்கும்போல் தோன்றியது.

"ஏன் அலாவுதீன், இப்படி என்னோடு பேசிக் கொண்டிருக்கிருயே, யாராவது உன்னுடைய ஆட்கள் எங்கள் கட்சிக்கு நீ ஒற்றன் வேலை செய்வதாக சந்தேகப்பட்டால்..."

"உன்னைப் பற்றி உங்கள் பீகத்திற்கு அதே சந்தேகம் தோன்றினுல்..."

இருவரும் 'கல கல' வென்று நகைததார்கள். இருவரிடமும் சிறிது நேரம் மௌனம் நிலவியது.

"சலீமா, ஓர் உண்மையை உன்னிடம் நான் சொல்லத்தான் வேண்டும். அல்தூனியா உங்கள் அரசியின் அழகைப் பற்றி நிரம்பக் கேள்விப்பட்டிருக்கிருர்......அவருக்கு பீகத்தின்மீது ஒரு கண்..."

"என்ன?......நான்......நான் நம்பமாட்டேன். சிற்றரசர் அல்தூனியாவுக்குச் சக்ரவர்த்தினியின்மீது காதலா? குருவி வல்லூறை இரையாக்க எண்ணுவது எவ்வளவு பேதமை!"

"உங்கள் பீகம் நிரம்ப அழகியாமே!"

"அழகி!"—சலீமா என்ற ருசியா பெருமூச்சு விட்டாள். பிறகு, "அல்தூனியா உன்னைப் போல் அழகா யிருப்பாரா?" என்ருள் ருசியா.

"இருப்பார்; ஆனல் அவர்கள் பீகம் உன்னைவிட அழகாக இருக்க மாட்டார்கள் என்றுதான் நினைக்கிறேன்..."

"ஏன்?" என்ருள் அவள்.

"நீதான் அழகின் எல்லையாக இருக்கிருயே!" என்று கூறிய

✲ தொடர்ச்சி 8-ம் பக்கம்

நம்பூதிரியாருக்கு நல் வரவு!

அன்புள்ள நண்பா!

சமீபத்தில் நடைபெற்று முடிந்த தேர்தலில் கம்யூனிஸ்ட்டுகள் 'சட சட'வென சரிந்து அதள—சுதள—பாதாளத்திற்குள் விழுந்துவிட்ட கதையைப் பற்றி சென்ற இதழில் விபரமாக எழுதியிருந்தேன்.

அந்தத் தோல்வியை கம்யூனிஸ்ட்டுகள் எப்படிக் கருதுகிறார்கள்—என்று கேட்டிருக்கிறாய்.

தோல்வி அடைந்த பிறகு என்ன செய்வார்கள், அவர்கள்?

முன்னம் ஆந்திராவிலே தோல்வியைச் சரணடைந்த போது அவர்கள் என்ன செய்தார்கள்?

—தோல்விக்கான காரணங்களை ஆராய்ச்சி செய்து கொண்டிருந்தார்கள்; இப்போதும் அதையேதான் செய்து கொண்டிருக்கிறார்கள்!

இலக்கிய உலகிலும்; கலை உலகிலும் தங்களுக்குச் செல்வாக்கு இல்லாமற்போனதைக் குறித்து வருந்துகிறார்களாம்!

தமிழ் — தமிழன் — தமிழ்நாடு — என்னும் பிரச்சினைகள் வந்தால் அதைப் பற்றிப் பேச தகுதியுடையவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தவர்கள்தான்—என்று மக்கள் மன்றத்திலே வயோதிகர்கள் முதல் வாலிபர்கள்வரை பரவியிருக்கும் நிலைமை கண்டு கலங்குகிறார்களாம்!

—இவையெல்லாம் உள்ளுக்குள் நெருங்கியவர்கள் உறவாடும்போது ஏற்படுகிற பேச்சுவார்த்தைகள்!

பொதுமக்களிடத்திலே தோல்வியால் தரை நோக்கித் தொங்கிக் கொண்டிருக்கும் தங்கள் முகங்களை மறைத்துக் கொள்வதற்கு அவர்களுக்கு அருமையான சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது.

தமிழகத்திலே தோல்வி என்றால். உடனே ஆவேசத்துடன் 'கேரளத்தைப் பாரீர்!' என்று கர்ஜனை புரிந்து; கவனத்தைத் திருப்புகிற அளவுக்கு அவர்கள் சாதுரியமாகப் பேசியும் எழுதியும் வருகிறார்கள்!

அன்புள்ள நண்பா! சென்னை மாநிலத்திலே ஒரு 'கேரளம்' ஏற்பட்டு; இங்குள்ள உண்மையான பொதுவுடைமைக் கட்சியான தி.மு. கழகம் ஆளும் கட்சியாக மாறினால்; அறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக வந்தால்; நான் நிச்சயமாகச் சொல்ல முடியும் பொன்முடி; கம்யூனிஸ்ட்டுகள் அதை ஒருக்காலும் ஒத்துக் கொள்ளவே மாட்டார்கள்! தங்கள் ஒத்துழைப்பையும் தர மாட்டார்கள்!

ஆனால், நாமோ அப்படியல்ல!

கேரளத்தில் கம்யூனிஸ்ட்டுகள் ஆட்சிக்கு வந்தது பற்றி மகிழ்ச்சி அடைகிறோம். ஏனெனில் அங்கே இதுநாள்வரை இருந்துவந்த 'ஒரு கட்சி சர்வாதிகாரம்' ஆழக் குழிதோண்டிப் புதைக்கப்பட்டிருக்கிறது!

கேரளத்திலே கதிர் அரிவாள் கட்சிக்காரர்களின் கையிலே செங்கோல் ஒப்புவிக்கப் பட்டமை குறித்து பெருமைப்படுகிறோம்; ஏனெனில் இடது சாரிக் கட்சிகளுள் ஒன்று ஒரு மாநிலத்தில் ஆளும் கட்சியாக மாறுவது இதர இடது சாரிக்



கட்சிகளுக்கெல்லாம் பெருமை தருவதாகும்!

—இவையனைத்தையும்விட கேரளத்து மாற்றத்தால் நாம் பூரிப்படைவதற்கு இவற்றைவிட மேலான இன்னும் இரண்டு காரணங்கள் இருக்கின்றன!

முதலாவதாக, கம்யூனிஸ்ட் கட்சி என்பது ஜனநாயக முறைகளை உபயோகித்து; பதவிக்கு வருவதை முழு மூச்சுடன் எதிர்த்துவரும் தன்மை கொண்ட அரசியல் கட்சியாகும்!

ஓட்டுச் சீட்டு சாதிப்பவைகளை பலாத்காரமாய் வேட்டு வைத்துச் சாதித்துக் கொள்ள முடியும் என்று நம்பிக் கொண்டிருக்கும் இயக்கமாகும்!

—இப்படி கத்தியுடனும், இரத்தமுடனும் யுத்தம் நடத்துவதிலேதான் தனது முழு பலமும் அடங்கியிருப்பதாகக் கருதிக் கொண்டிருந்த கட்சி இப்போது அந்தப் பழைய கொள்கைகளையெல்லாம் 'வாபஸ்' பெற்றுக் கொண்டு; நல்ல ஜனநாயக முடிவுக்கு வருவது ஜனநாயகத்தின் வெற்றியல்லவா? அதனால்தான் தமிழகத்தின் மகத்தான ஜனநாயக இயக்கம் நாம் என்ற முறையிலே நம்பூதிரியாருக்கு நல் வரவு கூறுகிறோம்!

ஊரிலே போக்கிரியாகத் திரிந்து கொண்டிருந்த பிள்ளையாண்டான்; பொறுப்புணர்ச்சியில்லாமல் ஊர்ப் பெரியவர்களின் பொறுமையைச் சோதனை செய்து கொண்டிருந்த 'பொல்லாதவன்' திடீரென்று ஒரு நாள் திருந்தி விட்டேன் என்று மக்கள் மன்றத்திலே ஒப்புதல் கொடுத்து; ஐந்து ஆண்டுகளுக்கு நல்லொழுக்கச் சீட்டிலே கையெழுத்துப் போட்டுக் கொடுத்தால் அப்படித் திருத்தம் பெற்ற 'மாஜி போக்கிரியை' நாம் வரவேற்காமலிருக்க முடியுமா?

அதே முறையில்தான் நாமும் கேரளத்தில் கம்யூனிஸ்ட் கட்சி ஆட்சி பீடத்திற்கு வந்தமை குறித்து நமது அகம் குளிர்ந்த, முகம் குளிர்ந்த மகிழ்ச்சியை—பாராட்டினைத் தெரிவித்துக் கொள்கிறோம்!

ஆமாம்; பலாத்காரத்திலே நம்பிக்கை வைத்திருந்த பொறுப்பற்ற கட்சியாக இயங்கி வந்ததுதான் கம்யூனிஸ்ட் கட்சி!

அந்தக்கட்சிதான் கேரளத்து வாக்காளர்களிடையே இனிமேல் பொறுப்புடன் நடந்து கொள்வதாக வாக்கு தந்ததன் பேரில்; இந்த முறை அவர்களுக்கு ஆளும் சந்தர்ப்பத்தை வாங்கிக் கொடுத்திருக்கிறார்கள் மக்கள்!

இன்னொரு உதாரணம் கூடச் சொல்லிக் காட்ட முடியும்!

முரடர்களாகத் திரிந்து கொண்டிருக்கும் சில மைனர்களை அடக்குவதற்கு பெற்றோர்கள் முதலில் கண்டித்துத்தான் பார்ப்பார்கள்! அது பலனளிக்காவிட்டால் நாலு பெரிய மனிதர்களை விட்டு புத்தி கூறிப் பார்ப்பார்கள்! இதற்கும் அடங்காவிட்டால் நல்ல பெண்ணைப் பார்த்துத் திருமணம் செய்து விடுவார்கள்.

திருமணத்திற்குப் பிறகு முரட்டுப் பையன் தனது மைனர் திருவிளையாடல்களையெல்லாம் மூட்டை கட்டி வைத்துவிட்டு; சாதுவாகிவிடுவான்!

—இதே கதைதான் இப்போது கேரளத்திலே நடைபெற்றிருக்கிறது!

பொறுப்பில்லாமல்; பலாத்கார வெறியுடன் உலவி வந்த கம்யூனிஸ்ட் கட்சியை நல்வழிப் படுத்துவதற்காக ஜனநாயகம் என்னும் நங்கையைப் பிடித்துக் கடிமணம் செய்து வைத்து விட்டார்கள், கேரளத்து வாக்காளர் பெருமக்கள்! ஆமாம்; கட்டையைக் கழுத்தில் கட்டிவிட்டார்கள்! இனிமேல் பையன் திருந்தித்தானே ஆகவேண்டும்? இதைப் பார்த்து நாம் எப்படிப் பரவசப் படாமலிருக்க முடியும்? அதனால்தான் கேரளததைப் பார்த்து நாமும் கரகோஷம் செய்கிறோம்!

பொதுமக்கள் அவர்கள் தலையிலே சுமத்தியிருக்கும் அந்த ஆட்சிப் பொறுப்பு இருக்கிறதே; அது சாமான்யப்பட்டதல்ல! கம்யூனிஸ்ட் கட்சியின் போக்கையே அது மாற்றியிருக்கிறது என்று கூறினாலும் அது மிகையாகாது—என்றுதான் கூறவேண்டும்!

நாற்காலியைப் பார்த்து நாற்காலி என்று ஏன் கூறுகிறோம்? அதற்கு நான்கு கால்கள் இருப்பதனால்தான்! மூன்று கால்கள் இருந்தால் அது முக்காலியாகிவிடும்!

அதே போலத்தான் ஜனநாயக முறையிலே நம்பிக்கை வைக்காத சோஷலிஸ்ட் கட்சிதான் கம்யூனிஸ்ட் கட்சி!

இப்போது அதிகாரப் பூர்வமாக கேரளத்துக் கம்யூனிஸ்ட் கட்சி ஜனநாயக முறையிலே மனப் பூர்வமான நம்பிக்கையுடன் நாடாளப் போகிறது!

ஆமாம்; பலாத்காரத்திலே நம்பிக்கை வைத்திருந்த அதன் நான்காவது கால் ஒடிந்து விட்டது.

மூன்றுகால் உள்ளதை முக்காலி என்று அழைப்பதைப் போலவே பலாத்காரத்தைவிட்டொழித்த கம்யூனிஸ்ட் கட்சியை இனிமேல் நாம் 'திருந்திய சோஷலிஸ்ட் கட்சி' என்றுதான் கூற வேண்டும்!

—இந்தக் கருத்தினைத்தான் சமீபத்தில் இந்திய உப கண்டம் வந்திருந்த இங்கிலாந்தின் தொழிற் கட்சிப் பிரமுகர் அனூரின் பெவான் கூறிச் சென்றிருக்கிறார்!

❋ 9-ம் பக்கம் பார்க்க.



அதே சிலை!

கையில் மூடிக்கொண்டு வந்திருந்த பொருளை பின்னால் மறைத்தபடி டாக்டரின் வீட்டுக்குள் நுழைந்தான் அலெக்சாண்டர் அவன் தாய்க்கு அவன் ஒரே மகன் சீராட்டும் பாராட்டும் மிகவும் அதிகம். முன் அறையில் உட்கார்ந்திருந்த டாக்டர் அவனைப் பார்த்தவுடன் மலர்ந்த முகத்துடன்,

"வாப்பா அலெக்சாண்டர்! என்ன விசேடம்? உடம்பு எப்படி இருக்கிறது?" என்றார். பையனுக்கு உடனே பேச வாய் வரவில்லை. திணறினான்.

"என் அம்மா உங்களை மிகவும் விசாரித்து, தன் மரியாதையைச் சொல்லச் சொன்னார்கள். நீங்கள் என் உயிரைக் காப்பாற்றி யிருக்கிறீர்கள். என் தாய்க்கு நான் ஒரே மகன் என்பதால் நீங்கள் எங்களுக்கு எவ்வளவு பெரிய உதவி செய்திருக்கிறீர்கள், என்னை சாவிலிருந்து மீட்டதின் மூலம்? இதற்கு நாங்கள் எந்த விதத்தில் பிரதி உபகாரம் செய்ய முடியும்?" என்றான் அலெக்சாண்டர்.

"அதைப்பற்றி அதிகமாகச் சொல்லாதே அலெக்சாண்டர்! நான் என் கடமையைச் செய்தேனே தவிர, பிரமாதமாக ஒன்றையும் புரட்டிவிட வில்லையே...எந்த டாக்டரும் இதைச் செய்யக் கூடியதுதான்!"

"டாக்டர்! நாங்கள் ஏழைகள்—அதனால் உங்கள் உதவிக்கு எங்களால் போதுமான அளவுக்கு நன்றி செலுத்த முடியாது! இருந்தாலும் உங்களுக்கு நாங்கள் அடிமைப் பட்டிருப்பதை ஏதாவது ஒரு வகையில் நன்றி தெரிவித்து, நிறைவேற்றாவிடில் எங்கள் மனதிற்கு அமைதியே இராது. ஆதலால் என் தாய் தங்களுக்கு ஒரு வெண்கலச் சிலையை காணிக்கையாக என்னிடம் அனுப்பியிருக்கிறாள். அபூர்வமான வேலைப்பாடுகள் நிறைந்த அந்தச் சிலையை கலையின் உச்சம்...எல்லை என்று சொல்லலாம். என் தாயைப் பொறுத்த வரையில் இந்தச் சிலை மிகவும் உயர்ந்த பொருள்" என்றான் வாலிபன்.

"தம்பி அலெக்சாண்டர்..." —டாக்டர் ஏதோ சொல்லப்

ரஷ்யக் கதை :

ஆண்டன் செகாவ்

போகுமுன் வாலிபன் குறுக்கிட்டான்.

"டாக்டர்...இதை நீங்கள் மறுக்கக் கூடாது. நீங்கள் தான் அனுப்பிய பொருளை ஏற்கவில்லை யென்பதை என் தாய் அறிந்தால் அவள் மனம் மிகவும் வேதனைப்படும்! அழகிற்கு இந்தச் சிலை ஒரு உதாரணம் டாக்டர். என் தந்தைக்குப் பிரியமான இந்தப் பொருளை என் தாய் பிரியத் துணிந்தாள் என்றால், எங்கள் நன்றியை நீங்கள் குறைத்து மதிப்பிட முடியாது! எங்கள் கடையில் வேறு பல சிலைகள் இருந்தாலும், இதற்கீடானது வேறு ஒன்றுமே இல்லை! நாங்கள் வெங்கலச் சாமான்கள் கடை நடத்துவதுதான் உங்களுக்குத் தெரிந்த விஷயமாயிற்றே!"

இப்படிப் பேசிக் கொண்டே அலெக்சாண்டர் தன் கையில் கொண்டு வந்திருந்த பொட்டலத்தைப் பிரித்து, சிலையை எடுத்து டாக்டர் முன் வைத்தான். வேலைப்பாடு நன்றாகத் தானிருந்தது. இரண்டு பெண்களின் உருவம்—அவர்களுடைய உடை அரை நிர்வாணக் கோலத்தில்—அவர்கள் நின்றிருந்த பாணியோ சற்று விரசத்தைத் தொடுவதாக அமைந்திருந்தது. பொதுவாக அந்தச் சிலை, சிறந்த கைத்திறனுக்கு ஒரு உதாரணம் என்றாலும், ஆபாசக் கோலத்தில் வெளிப்படையாக பார்வையில் படும்படி வைப்பதற்கு லாயக்கற்ற முறையில் இருந்தது!

அந்தப் பெண்களுக்கு உயிர் மட்டும் இருந்தால், அவர்கள் ஆடும் நாட்டியம், நல்லவர்கள் பார்க்கும்படியாக இராது!

டாக்டர் சிலையைப் பார்த்தார். பார்த்தவுடன் தலையைத் தாழ்த்திக் கொண்டார். லேசாக இருமல் வந்தது அவருக்கு! "அற்புதமான வேலைப்பாடுதான் என்பதை நானும் ஒப்புக் கொள்கிறேன் அலெக்சாண்டர்....ஆனால்...இதை ஏற்றுக் கொள்வதற்கு எனக்கு பயமாக இருக்கிறது," என்றார்.

"ஏன் டாக்டர்?......ஏன்?" என்றான் அலெக்சாண்டர்.

"எப்படி, இம்மாதிரியான ஒரு சிலையை என் மேஜையின் மீது வைப்பது? அறையின் பரிசுத்தம் கெட்டு விடாதா?" என்றார் டாக்டர்.

"உங்கள் பேச்சு எனக்கு மிகவும் ஆச்சரியமாக இருக்கிறது டாக்டர்...ஒரு சிறந்த கலைப் பெட்டகத்தை நீங்கள் வைத்துக் கொள்வதினால் உங்கள் மதிப்பு உயருமே அன்றி குறையாது. சிலையை இன்னொரு முறை பாருங்கள் — இம்மாதிரியான வேலைப்பாடுகள் நிறைந்த சிலை நமக்குக் கிடைப்பது மிகவும் அரிது டாக்டர்!"

"நீ சொல்வது சரிதான் அலெக்சாண்டர்......ஆனால் நீ என் நிலைமையையும் சற்று கவனிக்க வேண்டும். நானோ குடும்பஸ்தன்—எனக்கு குழந்தைகள் இருக்கிறார்கள்—என் மாமியாரோடு பல பெண்கள் வரும் இடமாயிற்றே இது... இந்த இடத்தில் சிலையை வைக்கலாமா?"

"என்ன டாக்டர் இது... சாதாரண ஜனங்களின் பேச்சைப் போலிருக்கிறது உங்கள் பேச்சு!...கலைக் கண் கொண்டு இதைப் பாருங்கள்...சிலையைப் பற்றி உங்கள் மனதில் நல்ல எண்ணம் உண்டாகும்...என் உயிரை நீங்கள் காப்பாற்றி இருக்கிறீர்கள்—அதற்காக என் தாய் தங்களுக்கு அனுப்பியுள்ள காணிக்கை இது-இதை நீங்கள் மறுத்தால் அவள் மனம் புண்படாதா? நாங்கள் வெகு அருமையாகப் போற்றி வைத்திருந்த இந்தச் சிலையை உங்களுக்குத் தருகிறோம் என்றால், அதில் பொதிந்திருக்கும் நன்றியை நீங்கள் கவனிக்க வேண்டும்!"

"அதே சமயத்தில் நீ என் நிலைமையையும் சற்று நினைத்துப் பார்க்க வேண்டும்! என்னைப் போலவே எல்லோரும் இருப்பார்களா? நல்லவர்களோடு நாலு கெட்டவர்களும் இல்லாமலா போய்விடுவார்கள்? நீ என்னுடைய விவாதத்தின் பொருளையும் உணர வேண்டும்......பெண்கள் வரக் கூடிய இடத்தில் இம்மாதிரி சிலை எதற்கு என்றுதான் பார்க்கிறேன்!"

"விவாதத்திற்கு இங்கு இடமே இல்லை டாக்டர்," என்று கூறிய அந்த மாஜி நோயாளி—டாக்டர் சிலையை எந்த இடத்தில் வைக்க வேண்டும் என்பதைப் பற்றி மேலே சொல்ல ஆரம்பித்து விட்டான்.

"ஜப்பானியக் கிண்ணம் வைத்திருக்கிறீர்களே, அதன் அருகே இதை வைத்தால் மிகவும் நன்றாக இருக்கும்... இதோடு ஜதையாக இன்னொரு சிலையும் இருந்திருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும் தெரியுமா?...என்னிடம் இல்லை டாக்டர்!"

அலெக்சாண்டர் சிலையை வைத்துவிட்டுப் போய்விட்டான். டாக்டர் அதற்கு மேலும் என்ன செய்ய—சொல்ல முடியும்? தலையை சொரிந்துகொண்டு யோசிக்க ஆரம்பித்துவிட்டார்.

"அழகான சிலைதான்—அதனால் வீட்டிலும் வைத்துக் கொள்ள முடியாது...வெளியிலும் எறிந்துவிட முடியாது! வீட்டில் வைத்துக் கொள்ளலாம் என்று முடிவு செய்தாலும்...என் வீட்டில் நிச்சயமாக இந்த மாதிரி சிலை இருக்க முடியாது! அதனால் இதை யாரிடம் தள்ளி விடலாம்?" என்று டாக்டர் மண்டையை உடைத்துக் கொண்டார்.

கடைசியில் அவருக்கு தனது வக்கீல் நண்பர் ஒருவரின் ஞாபகம் வந்தது. ஏதோ வழக்கில்கூட அவர் டாக்டருக்காக வாதாடி ஜெயித்தார். அதற்கு அவர், டாக்டர் தனது நண்பர் என்ற காரணத்தினால் பணம் பெற்றுக் கொள்ளவில்லை. அதனால் இந்தச் சிலையை தனது அன்பளிப்பாக அவருக்குக் கொடுத்துவிடலாமே! டாக்டருக்கு இது சரியான யோசனையாகப்பட்டது. உடனே டாக்டர், சிலையுடன் தனது வக்கீல் நண்பரின் வீட்டுக்குப் புறப்பட்டு விட்டார்.

வக்கீல் வீட்டில் இருந்தார். தனது பழைய நண்பரான டாக்டருக்கு அவர் கொடுத்த வரவேற்பு மிகவும் பலமாக இருந்தது. ஆரம்ப பேச்சுக்

தமிழில் :

'அதிகமான்'

கள் ஒரு மாதிரி முடிந்ததும் டாக்டர் தான் வந்த விஷயத்தைப் பற்றிப் பேச ஆரம்பித்தார்.

"நீ எனக்காக வாதாடி வழக்கில் வெற்றியைத் தேடித் தந்திருக்கிறாய்...என் மீதுள்ள அன்பினால் பணம்கூட வாங்க மறுத்து விட்டாய். இருந்தாலும் எனது நன்றியை நான்

❋ தொடர்ச்சி 10-ம் பக்கம்

அபிசீனிய அடிமை..

❋ 5-ம் பக்கத் தொடர்ச்சி

படியே ருசியாவின் கரங்களை எடுத்துக் கண்களில் ஒத்திக் கொண்டான். அவளும் கரங்களை விடுவித்துக் கொள்ள முயற்சிக்கவில்லை. அவனே மெதுவாக அவள் கரங்களில் முத்தமிட்டான்.

" அலாவுதீன் !" என்றாள் அவள்.

"சலிமா......வீரம் விளக்கம் பெற வந்த இடத்தில் வேல் விழியாள் உன்னைச் சந்தித்தேன். போரின் கொடுமைகளைப் பார்த்துப் பூத்துப் போன என் கண்கள் உன் புன்னகையால் சாந்திபெற்று விட்டது. போராசையால் இருண்டு போயிருந்த என் இதயத்தில் பேரொளியாய் ஒளி வீசத் தொடங்கி விட்டாய்...சலீமா, நீயும் நானும் இப்படிப் போர்க்களத்தில் நள்ளிரவில் சந்திக்கும் நிலை பெற்றதை என்னவென்று நினைக்கிறாய்?...... அல்லாவின் ஆணை இன்னும் உனக்கு விளங்கவில்லையா. சலீமா?"— அவளை மார்புறத் தழுவிக் கொண்டு உணர்ச்சியால் வார்த்தைகளைக் கொட்டினான். அவனுடைய இன்ப அரவணைப்பில் போரின் கொடுமைகளையெல்லாம் மறந்து மன ஆறுதல் பெற்றாள் ருசியா — இல்லை; சலீமா !

போர் முடியாவிட்டால் மறுநாளும் அதே இடத்தில் சந்திப்பதாக வாக்குறுதி யளித்துப் பிரிந்தான் அலாவுதீன். தான் செய்தது 'சரியா, தவறா' என்பது புரியாமல் அவன் போன பின் வெகு நேரம்வரை நின்று கொண்டிருந்துவிட்டுப் பாசறையை நோக்கிப் புறப்பட்டாள் பீகம்.

* * *

போருக்குத் திட்டம் தீட்ட வேண்டும்; ஆனால் இரவெல்லாம் அவளால் அதைச் செய்யவே முடியவில்லை இரவு ஏற்பட்ட எதிர்பாராத அந்த அனுபவம் அவள் உள்ளமெல்லாம் புல்லரித்தது. இதுவரை வாழ்க்கையில் அனுபவித்தறியாத ஏதோ ஒரு புத்துணர்ச்சி தோன்றிவிட்டதை உணர்ந்தாள். யாகூத்திடம் அவள் கொண்டிருந்த உணர்ச்சிக்கும், இந்த அலாவுதீனைச் சந்தித்தால் அவன்மீது ஏற்பட்டுள்ள உணர்ச்சிக்கும் அடிப்படையிலேயே ஒரு மாறுபாடு இருப்பதை உணர்ந்தாள்.

யாகூத்திடம் கொண்டிருந்த உணர்ச்சியில் ஒரு வேகமும் வெறியும், அது நிராகரிக்கப்பட்டபோது ஒரு வகையான வெறுப்பும் பழிவாங்கும் உணர்ச்சியும் மேலோங்கியதை அறிந்தாள். ஆனால் அலாவுதீனிடம் புதிதாக ஏற்பட்டுள்ள உணர்ச்சியில் பாசமும் பரிவும், அது முழுமையடையாமல் போகுமானால் ஏக்கமும் ஏமாற்றமும் உண்டாகும் நிலையும் தோன்றியிருப்பதையும் உணர்ந்தாள்!

உணர்ச்சிகள் குழம்ப இன்ப வேதனைப் பட்டுக்கொண்டே படுக்கையில் புரண்டாள். நாளை போர் என்னவாகும்? அலாவுதீனை மறுபடியும் சந்திக்க முடியுமா? எங்கே சந்திப்பது? எப்படிசந்திப்பது? சந்திக்கமுடியாமலேயே போய் விட்டால்...? போரில் ஒரு வேளை தோற்றுப்போனால்... ... யாகூத்தின் முன் கைதியாக அவள் நிறுத்தப் பட்டால், அவன் அவளுக்கு என்ன தண்டனை அளிப்பானோ! ஆனால் அலாவுதீனுக்கு உண்மையிலேயே காதல் இருந்தால் அவளைக் கைவிடுவானா? ஆனால் பணிப் பெண் சலீமா என நினைத்துக் காதலித்தவன், அரசி என்ற பிறகு என்ன செய்வானோ? தவிர, அல்தூனியாவுக்கு அரசிமீது ஒரு கண் என்றல்லவா அலாவுதீன் சொன்னான்...ஒரு வேளை அல்தூனியாவிடம் அகப்பட்டு மந்தி கைமலராக வேண்டியிருக்குமோ! ...... சந்தேகமும் சஞ்சலமும் அலை அலையாக வந்து மோத, படுக்கையில் புரண்டு கொண்டேயிருந்தாள். போர்க் கொம்புகள் ஊத ஆரம்பித்த பொழுதுதான், பொழுது விடிந்துவிட்ட உண்மை அவளுக்குப் புலப்பட்டது.

மறுநாள் போர் பயங்கரமானதாக இருந்தது; இரண்டு தரப்புப் படைகளும் இறுதியை அன்றே கண்டுவிட வேண்டும் என்ற உறுதியான முடிவோடு போரிட்டன. அரசி ருசியாவோ, கவசமணிந்து, கையிலே வாளேந்தி. குட்டிகளைக் காப்பாற்ற கொடும் போர் புரியும் பெண் வேங்கை போல சீறி சீறிப் போராடினாள்: சிரங்கள் அறுந்தன— செங்குருதி வெள்ளமாக ஓடியது. பிணமலை குவிந்தது, கதிரவன்கூட இந்தக் காட்சியைக் காணச் சகியாமல் அடிக்கடி மேகத் திரைக்குள்ளே மறைந்து கொண்டான்.

நண்பகலுக்குப் பின் போரின் முடிவு ஒருவாறு புலப்பட்டது. கலகக்காரர்களின் கையே மேலோங்கி நின்றது. அரசி ருசியாவும் அயர்ந்து விட்டாள். அவளைச் சுற்றிலும் எதிரிப் படைகள் நெருங்கி வந்து கொண்டிருந்தன. சற்று தூரத்தில் யாகூத் அவர்களை உற்சாகப்படுத்திக் கொண்டிருந்தான். அரசியின் தலை சுற்றியது. அலாவுதீனை அவள் கண்கள் தேடின. கண்ணுக்கெட்டிய தூரம் அவனைக் காணவேயில்லை...அரசி மூர்ச்சையுற்றுக் குதிரைமேலிருந்து கீழே சாய்ந்தாள்......

* * *

அவள் கண் விழித்த பொழுது எதிரிகளின் பாசறையில் இருப்பதை உணர்ந்தாள். சற்று தூரத்தில் ஓம்ராக்கள் புடைசூழ, யாகூத் ஹூக்கா பிடித்துக் கொண்டிருந்தான். நல்லவேளை; அவன் பக்கத்தில் மட்டும் பமீயா இல்லை!

போர்க்களம் அமைதியாக இருந்தது. ஆம், ருசியா தோற்று விட்டாள் — அவள் இப்பொழுது கைதி! அவள் பயந்த உண்மை நடந்து விட்டது.

வெறுப்புணர்ச்சியோடு யாகூத்தைப் பார்த்தாள்!

"பீகம் சாகிபா, கோபப்படக் கூடாது. நீங்கள் இப்பொழுது கைதியானாலும், அரசிக்குரிய மரியாதைகளோடு நடத்தப்படுவீர்கள்," என்றான் யாகூத்.

"இல்லை, நான் கைதிக்குரிய தண்டனையே பெற விரும்புகிறேன்," என்றாள் அரசி ஆவேசமாக.

"மேலிடத்துக் கட்டளை அப்படி. உங்கள் சகோதரர் பெய்ராம் நாளை டெல்லி பாதுஷாவாக முடிசூடப் போகிறார். நீங்கள் உங்கள் உரியவரிடம் சேர்க்கப்பட இருக்கிறீர்கள்."

"எனக்குரியவரா? யார் அவர்?" என்றாள் அரசி, சற்று அச்சமும் ஆத்திரமும் கலந்த குரலில்.

"அல்தூனியா—பிதுந்தா மாவட்டப் பிரதிநிதி! இச்சைக்கு இணங்காதவர்களைத் துச்சமென மதித்தீர்களே, நாளை அல்தூனியாவின் இச்சைக்கு நீங்கள் இணங்க மறுத்தால் ... இப்பொழுது எண்ணிப் பாருங்கள் பீகம், அன்று பட்ட அவஸ்தை புரியும்..."

"முடியாது யாகூத், என்னை அல்தூனியாவிடம் மட்டும் அனுப்பாதே. இந்த உதவியை நான் என்றும் மறக்க மாட்டேன்,"—மாஜி பீகம் அபிசீனிய அடிமையிடம் கெஞ்சினாள்.

'ஆகாகா' என்று பயங்கரமாகச் சிரித்தான் யாகூத். "விரகதாபம் பொல்லாதது என்பதை நான் உங்களுக்கு விளக்க வேண்டியதில்லை யல்லவா?"— வெந்த புண்ணில் வேல் பாய்ச்சினான் — அதுவும் பழுக்கக் காய்ந்த வேல்!

அரசியை அச்சம் வாட்டியது. செய்வது புரியாமல் விழித்தாள்.

"பீகம், உங்களைக் கைது செய்து ஒப்படைக்கும் பொறுப்பை என்னிடம் விட்டுவிட்டு இன்று காலையிலேயே அல்தூனியா அவருடைய ஊருக்குப் போய்விட்டார். நீங்கள் நாளை தக்க பாதுகாப்போடு பிதுந்தா போய்ச் சேருவீர்கள். இப்பொழுது சற்று கண்ணயருங்கள்........இதோ, இந்த வேலையாள், அல்தூனியாவின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவன். வெளி உலகத்தோடு இவன் மூலம் தொடர்பு கொள்ள உங்களுக்குப் பூர்ண உரிமையுண்டு...துரோக வேலைகளுக்கு மட்டும் இவன் பயன் படமாட்டான்.......ஜாக்கிரதை!" என்று எச்சரித்துவிட்டு யாகூத் அங்கிருந்து போய்விட்டான்.

யாகூத் போய் சிறிது நேரத்திற்கெல்லாம், பீகம் அந்த வேலையாளை அழைத்தாள்.

"உன் பெயரென்ன?"

"சயத்கான்!"

"அச்சா, சயத்கான், நான் அல்தூனியாவின் பீகம் ஆகப் போகிறேன். தெரியுமா உனக்கு?"

"பேஷாத் தெரியுமே! பகதூருக்கு உங்க மேலே ரொம்ப ஆசை, ரொம்ப ஆசை......பகதூரை நீங்கள் நிக்கா பண்ணிட்டா நீங்கள் வெச்சது தான் சட்டம்...ஹி ஹி..."

"சபாஷ் சயத், நான் பகதூரை 'நிக்கா' செய்தவுடன் உனக்கு வேண்டியதெல்லாம் தருவேன்!"

"பகூத் அச்சா! பீகம், நான் ரொம்ப ஏழை! என்னை மட்டும் கொஞ்சம் பெரிய மனசு பண்ணி...."

"அதெல்லாம் கவலைப் படாதே சயத்; நான் உன்னை ஒரு ஓம்ராவாக ஆக்கி விடுகிறேன்..." என்று கூறிக் கொண்டே அவனை அருகில் வரும்படி சைகை காட்டினாள். அவன் காதோடுகாதாக ஏதோ சிறிது நேரம் ரகசியமாகச் சொன்னாள்.

"முடியாது பீகம், தலை போயிடும்."

"பயித்தியக்காரா, இது துரோகமுமல்ல; யாருக்கும் ஆபத்துமில்லை; வெறும் உதவி... ஓம்ரா பதவியை மறந்து விடாதே...ஹூம்..."

"பீகம்!......"

"அச்சப்படாதே, சீக்கிரம் புறப்படு!"

"காட்டிக் கொடுத்து விடமாட்டீர்களே..."

"என்ன சயத், என் மீது உனக்கு நம்பிக்கையில்லை..."

★ தொடர்ச்சி 12-ம் பக்கம்

தி. மு. கழகப்
பொதுக் குழுக் கூட்டம்
14-4-57 ஞாயிறு அன்று
குளித்தலையில் நடைபெறும்
—தலைமைக் கழகம் (தி. மு. க.)

குளித்தலையில் மு. க.

ஆசிரியர் மு. க. அவர்சள், 14—4—57 அன்று குளித்தலையில் நடக்க இருக்கின்ற தி. மு. கழகப் பொதுக்குழுக் கூட்ட ஏற்பாடுகளைக் கவனிக்க, 7—4—57 முதல் குளித்தலையிலே தங்குகிறார்கள்.

நன்றி!

நடைபெற்ற பொதுத்தேர்தலில், திருச்சி மாவட்டத்தில், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நிறுத்தப்பட்ட அபேட்சகர்களுக்கு, மாற்றுக் கட்சிக்காரர்களின் ஏச்சுக்கும், பேச்சுக்கும், இழிமொழிக்கும், பழிசொல்லுக்கும் அஞ்சாது ஆதரவுகாட்டி வாக்களித்த வாக்காளர்களுக்கும், கஷ்டநஷ்டம் பாராது அல்லும் பகலும் பாடுபட்ட அருமைத் தோழர்கட்கும், திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கட்கும், ஆதரவாளர்களுக்கும், திருச்சி மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் இதயப்பூர்வமான நன்றியையும், பணிவன்பான வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இங்ஙனம்,

அம்பில் தருமலிங்கம்

படித்து விட்டீர்களா?

இலக்கிய உலகில் விடிவெள்ளி!
எழுத்திலே உயிர்த் துடிப்பு!
எண்ணத்திலே புதுமை! புரட்சி!

அடிமை
(நாடகம்)

எழுதியவர்: ச. இராசமாணிக்கம். விலை அணு 6. வியாபாரிகளுக்கு 25 சதவீதம் கழிவு.

ராஜா பதிப்பகம்,
9. இலட்சுமிபுரம் 3, மதுரை.

நடன நாடகம்!

6-4-57 சனி மாலை 6-30 மணிக்கு
கோகலே மண்டபத்தில்
இரா. நெடுஞ்செழியன்
அவர்கள் தலைமையில்
குமாரி
ஈ. வி. சரோஜா
பங்கேற்கும்
நடன நாடகம் நடைபெறும்.

★

நன்கொடை: ரூ. 3, 2, 1

குறிப்பு: நுழைவுச் சீட்டுகள் இராயபுரம் 'அறிவக'த்தில் கிடைக்கும்.

நீட்டோலை

❋ 6-ம் பக்கத் தொடர்ச்சி

அருமை நண்பா! அகிலம் பரந்த கம்யூனிஸ்ட் கட்சியின் இந்தியக் கிளை சோஷலிஸ்ட் கட்சியாக அவதாரம் எடுத்திருக்கும்போது நம்மால் ஆசிகூறாமல் சிலைபோலிருக்க முடியுமா? அதனால்தான் ஆவலோடு அந்தத் திருப்பத்தை வரவேற்கிறோம்!

அன்பு நண்பா! கேரளத்து மாற்றத்தை நாம் கைகொட்டி வரவேற்பதற்கான இரண்டாவது காரணத்தையும் கூறி வைக்கிறேன், கேள்!

கேரளம் நாம் ஒரு நாள் பெறப்போகிற திராவிடத்தின் ஒரு பகுதி; ஒரு அங்கம்! அந்தப் பகுதி [வாழ்வோர் காங்கிரசிற்குக் கல்லறை எழுப்பியிருக்கிறார்கள் என்றால் என்ன பொருள்?

இடதுசாரிகளின் கருத்துக்குச் செவிசாய்க்கின்ற அளவுக்குப் பக்குவப்பட்டிருக்கிறார்கள் என்றுதான் பொருள்!

அதனால்தான் நாமும் பரவசமடைகிறோம்—நம்முடைய கொள்கையும் நல்ல முறையில் விளக்கப்பட்டால் கேரளத்து மாந்தர் அதை முழு மனதுடன் ஒப்புக்கொள்வார்கள் என்கிற நம்பிக்கை இப்போது முன்னிலும் பன்மடங்கு அதிகமாக வலுவடைந்திருக்கிறது, நம் நெஞ்சத்தில்!

கம்யூனிஸ்ட் கட்சியையே ஒப்புக் கொண்டிருக்கிறார்கள்! அதைவிட எல்லா விதத்திலும் பெருமைபெற்றிருக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தையா ஒப்புக்கொள்ள மறுப்பார்கள்?

—நிச்சயம் மறுக்கமாட்டார்கள்!

அதனால்தான் கேரளத்து மாற்றம் மலையாள மாந்தரின் அரசியல் வளர்ச்சியினைக் குறிப்பதாக உணர்ந்து குதூகலப்படுகிறோம்!

ஆனால் இந்த நேரத்தில் இன்னொன்றையும் குறிப்பிடாமல் இருக்க முடியவில்லை நண்பனே!

நாம் வெளியிட்ட தேர்தல் அறிக்கையினைக் கையில் வைத்துக்கொண்டு இந்தக் கம்யூனிஸ்டுகள் என்னென்ன கேலி வார்த்தைகளை உதிர்த்திருக்கிறார்கள் தெரியுமா?

காங்கிரஸ்காரர்கள்கூட அவ்வளவு கிண்டல் புரியவில்லை; ஆனால் இவர்களோ அவ்வளவு குடுட்டுத்தனமாக நம்மீது தாக்குதல் நடத்தினார்கள்!

தேர்தலுக்கு நிற்கிறார்களே! இவர்கள் திராவிட நாட்டுப் பிரச்சினையை வைத்துப் போட்டியிட முன்வருவார்களா? அந்தத் துணிவு இவரிடம் இருக்கிறதா?

—கேட்டார்கள், இப்படி; நாம் என்னவோ திராவிட நாட்டுப் பிரிவினையையே கைகழுவிவிட்டதாகக் கருதிக்கொண்டு!

அப்படியே இந்த தி. மு. க. காரர்கள் பதவிக்கு வந்தால் உடனே திராவிடநாடு பெற்றுவிட முடியுமா?

—உறுமினார்கள் நம்மைப் பார்த்து!

ஆனால் தமிழ் நாட்டில் அவர்கள் தரைமட்டமாகி விட்டாலும் இப்போது கேரளத்தில் அவர்களுக்கு வெற்றி கிடைத்திருக்கிறது!

பதவிக்கு வரும் நம்பூதிரியார் என்ன செய்யப்போகிறார் என்று கருதுகிறீர்கள்?

தோட்டங்களை யெல்லாம் உடனடியாக — அவர்கள் முன்பு அடிக்கடி கூறிவந்ததைப்போல முதலாளிகளுக்கு நஷ்ட ஈடு எதுவும் தராமல் தேசீய மயமாக்கப் போகிறார்களா?

அல்லது நமக்கு திராவிட நாட்டுப் பிரச்சினை எவ்வளவு முக்கியமானதோ; அதுபோல அவர்களுக்கு மிக முக்கியமான உயிர்ப் பிரச்சினையாக இருந்து வரும் "பாட்டாளிகளின் சர்வாதிகாரத்தை" கேரளம் முழுவதும் நிலைநாட்டப் போகிறார்களா?

அல்லது சீனாவிலே; ரஷ்யாவிலே இருப்பதைப்போல் நிலத்தையெல்லாம் யாருக்கும் எந்தவித நஷ்ட ஈடு கொடுக்காமல் பொதுவுடமையாக்கப் போகிறார்களா?

—இவற்றில் எதையும் செய்யப் போவதில்லையாம் கேரளத்துக் கம்யூனிஸ்ட் கட்சி!

கம்யூனிசத் தத்துவத்தின் எந்த அடிப்படை அம்சத்தையும் இப்போது கேரளத்திலே அமுலாக்கப் போவதில்லையாம்!

இருந்தாலும் அந்த ஆட்சிக்குப் பெயர் கம்யூனிஸ்ட் கட்சி ஆட்சியாம்!

—இதற்காக முன்னறிவிப்பாகவே சொல்லிவிட்டார்கள் பெருந் தலைவர்கள்; நாங்கள் அரசியல் திட்டத்திற்குக் கட்டுப்பட்டே கடமையாற்றுவோம்—என்று!

கேரளத்திலே கம்யூனிசத் தத்துவத்தை எந்தவொரு அணுவளவும் அமுல் நடத்த அஞ்சி நடுங்கிடும் கட்சிக்காரர்கள்தான் சிறிதும் வெட்கமின்றி நம்மைப் பார்த்துக் கேட்கிறார்கள்—உங்களால் திராவிட நாட்டுப் பிரிவினையை வைத்துத் தேர்தலில் போட்டியிட முடியுமா?—என்று!

பாவம்! 'கம்யூனிஸ்ட்டுக் கட்சி' என்னும் இரு வார்த்தைகளில் கம்யூனிசம் என்ற பதத்திற்குள்ள உன்னதமான பொருளுக்கு இழுக்கு தேடி வைத்துவிட்டார்கள்! பாவம்; அவர்களுக்காக நாமெல்லாம் பரிதாபப்படுவோமாக!

இங்ஙனம்,
உனதன்புத் தோழன்

திருவண்ணாமலை நகரசபை அங்கத்தினர்; நாட்டுத் தொண்டினைத் தன் வீட்டுப் பணியெனக் கருதும் ப. உ. சண்முகம் — திருவண்ணாமலை பொதுத் தொகுதியின் எம். எல். ஏ.!

தருமலிங்கம் (திருவண்ணாமலை): அதர்மத்தைக் குழிதோண்டிப் புதைத்து, நம் கொள்கை விளக்கமுரைக்க டெல்லி மக்கள் சபைக்குச் செல்கிறார்.

கள்ளக்குறிச்சி பொதுத் தொகுதியிலிருந்து சென்னை சட்ட மன்றம் நுழையும் திரு சி. நடராசன்.

சந்தானம்— திருவண்ணாமலைத் தனித் தொகுதி தந்த பொதுநலத் தொண்டர்; பதினைவரில் ஒருவர்!

'அவதூறு வழக்கு' முடிவு!

'தமிழ் சினிமா' என்ற பத்திரிகையில் அதன் ஆசிரியரான ஏ. கரீம் என்பவர், ஆசிரியர் மு. கருணாநிதியைப் பற்றியும், அவர் சார்ந்திருக்கும் அரசியல் கட்சியில் அவருக்குள்ள தொடர்பு பற்றியும், அவதூறான முறையில், உண்மைக்குப் புறம்பானவற்றை எழுதி வெளியிட்டதன் காரணமாக, ஆசிரியர் மு. கருணாநிதி அந்த நபரின் பேரில் இரண்டாயிரம் ரூபாய் நஷ்டஈடு கேட்டு சென்னை இரண்டாவது உதவி சிவில் நீதிபதி அவர்களின் நீதி மன்றத்தில் வழக்குத் தொடர்ந்திருந்தார்.

அந்த வழக்கு விசாரணைக்கு வருமுன்பு பிரதிவாதியாகிய 'தமிழ் சினிமா' என்கிற அந்தப் பத்திரிகையின் ஆசிரியர் கீழ்க்கண்டவாறு எழுதிக் கொடுத்தார் :

"பிரதிவாதியாகிய நான் வாதியின் பேரில் தனிப்பட்ட முறையிலும் ; பத்திரிகையாளர் என்கிற முறையிலும் மிக உயர்ந்த மரியாதை வைத்திருக்கிறேன். வாதியை தனிப்பட்ட முறையிலும் ; பொது வாழ்வுத் துறையிலும் தாக்கவோ அல்லது அவரைப் புண்படுத்தவோ நான் என்றும் நினைத்தது கிடையாது. **நான் எழுதியவைகள் எனக்குத்தெரிந்த விஷயங்கள் அல்ல.** என்னுடைய எழுத்துக்கள் வாதியின் கௌரவத்தை என்றுமே தாழ்த்தும் நோக்கம் கொண்டவை அல்ல. வாதியின் ஒழுக்கத்திலும், பண்பிலும், நேர்மையிலும், தலைமையிலும் நான் மிக உயர்ந்த மரியாதை வைத்திருக்கிறேன். பொதுமக்கள் மதிப்பீட்டில் வாதியின் கௌரவத்தைக் குறைக்க வேண்டுமென்று நான் நினைத்ததுமில்லை ; நினைக்கப் போவதுமில்லை."

—இவ்வாறு நீதிபதி அவர்களின் முன்பு எழுதிக் கொடுத்து கையெழுத்திட்டுத் தந்ததின் பேரில் வழக்கு மேற்கொண்டு நடத்தப் படாமல் தள்ளுபடி செய்யப்பட்டது.

ஆசிரியர் மு. க. வின் சார்பாக வழக்கறிஞர் திரு. பி. ஆர். கோகுல கிருட்டினன் அவர்கள் வழக்கை நடத்தினார்கள்.

"வெள்ளி வீதி"

10-4-57 இதழ்

அழகிய அமைப்புடன்—புதிய பகுதிகளுடன்

மு. க. வின்

என்னைப்பற்றி...

தொடர் கட்டுரையுடனும்
வெளிவருகிறது!

விலை: 14 புதிய காசு

[ஜனவரி, பிப்ரவரி மாத பட்டியல் பாக்கிகளை இதுவரை அனுப்பாத விற்பனையாளர்களுக்கு இனி இதழ் அனுப்ப இயலாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.]

அதே சிலை

❋ 7-ம் பக்கத் தொடர்ச்சி

எந்த விதத்திலாவது தெரிவித்தாக வேண்டும்! அதற்காக உனக்கு ஒரு பரிசு கொண்டு வந்திருக்கிறேன்; ஏற்றுக் கொள்!" என்று கூறிய டாக்டர், சிலையை எடுத்து வெளியே வைத்தார். வக்கீல் சிலையைப் பார்த்தவுடன் பரவசமடைந்து போனார்.

"அற்புதம்!...மிகவும் அழகாகப் படைத்திருக்கிறான்," என்றார் வக்கீல்.

டாக்டருக்கு இந்த ஆரம்பம் பிடித்திருந்தது. ஆனால் அதைத் தொடர்ந்து வக்கீல் பேசியது? "சிலை நன்றாக இருக்கிறது! இதை எப்படி என் அறையில் வைக்க முடியும்? அதனால் இதை...உன் பரிசை ... நான் அங்கீகரிப்பதற்கில்லை!" என்றார்.

"ஏன்?"—டாக்டருக்கு மூச்சுத் திணறும் போலிருந்தது.

"காரணம் உனக்கே தெரிந்திருக்க வேண்டுமே! என் தாயார், கட்சிக்காரர்கள், வேறு பல நண்பர்கள் வரும் இந்த இடத்தில் இப்படிப்பட்ட சிலையை வைக்கலாமா? இதை நான் வைத்துக் கொண்டாலும் வேலைக்காரர்கள் முகத்தை என்னால் நேருக்கு நேர் பார்க்க முடியாதே!"

"எனது பரிசை நீ மறுக்கக் கூடாது நண்பா! இதன் வேலைப்பாட்டைக் கவனித்தாயா? பெண்களின் முகத்தில் தோன்றும் பாவத்தைப் பார்!.. நீ என்ன வேண்டுமானாலும் சொல்...இந்தப் பரிசு உனக்குத்தான்...வைத்துக் கொள்!" என்று கூறியபின் சிலையை அங்கேயே வைத்துவிட்டு டாக்டர் வேகமாக வெளியே நடந்தார். இப்போதுதான் அவருக்கு தாராளமாக மூச்சு வந்தது!

டாக்டர் வெளியேறியவுடன் வக்கீல் தலைமேல் கை வைத்துக் கொண்டு உட்கார்ந்து விட்டார். டாக்டர் சிலை கிடைத்தவுடன் எந்த நிலையில் இருந்தாரோ, அதே நிலையில் வக்கீலும் இப்போது இருந்தார்!

கடைசியாக, அவரும் சிலையைத் தன் கையிலிருந்து தள்ளிவிட்டுவிட முடிவு செய்து அதற்காக ஒரு நண்பனைத் தேர்ந்தெடுத்தார். அந்த நண்பன் ஒரு நாடகத்தில் நகைச்சுவை வேஷம் தாங்குபவன்! அவனைப் பாராட்டிவிட்டு, அவனுக்கு சிலையைப் பரிசாகக் கொடுக்கலாம் என்பது வக்கீலின் திட்டம். அது வெகு சீக்கிரத்தில்...சுலபத்தில் முடிந்து விட்டது.

நகைச் சுவை நடிகனுக்கு கிடைத்த பரிசை அன்றிரவு அநேக நண்பர்கள் பார்த்தார்கள். அவன் அறைக்குள் ஒரே கிண்டலும் கும்மாளமும்! நமுக்கு சிரிப்பு சிரித்தவர்கள்... பாராட்டியவர்கள்...ரசித்தவர்கள் ஆகிய எல்லோரும் அங்கு இருந்தார்கள். ஆனால் பெண்கள் உள்ளே அறைக்குள் வர வேண்டும் என்று விரும்பிய போதுமட்டும் அவர்களுக்கு கதவு திறக்கப்படவில்லை.

"சரியாக ஆடை அணிந்து கொள்ளவில்லை......இன்னும் சற்று நேரம் பொறுத்து வாருங்கள்!" என்று அவர்களை அனுப்பிக் கொண்டிருந்தான் நடிகன்.

கூட்டம் ஒரு மாதிரியாகக் கலைந்தவுடன் நடிகன் தனக்கு அலங்காரம் செய்துவிடும் வேஷக்காரனுடன் சேர்ந்து ஆலோசித்தான்.

"இதை என் வீட்டில் வைத்திருந்தால், என்னை, வீட்டுக்காரி வீட்டைக் காலி செய்யும்படிச் சொல்லிவிடுவாள்—இங்கு வைத்தாலோ, ஒரு நடிகையும் உள்ளே வரமாட்டார்கள். அதோடு அவர்கள் பகையும் மிஞ்சும்! இதை என்ன செய்வது?—' வேஷம் போடுபவன் நகைச்சுவை நடிகனின் நிலையை ஒருவாறு புரிந்துகொண்டான். "ஆமாம்; இதை ஏன் நீங்கள் விற்றுவிடக்கூடாது...என் வீட்டுக்குப் பக்கத்தில் இம்மாதிரி பொம்மைகள் விற்கும் கடை ஒன்று இருக்கிறது ... அங்கே கொடுத்தால் இது நல்ல விலைக்குப் போகும்!" என்று அவன் நடிகனுக்கு யோசனை சொன்னான். நடிகன் அதற்குமேல் தாமதிக்க வில்லை. சிலையை வேஷம் போடுபவனிடம் கொடுத்து அனுப்பிவிட்டான், விற்ற பணத்தோடு திரும்பி வரும்படி!

★

இரண்டு நாட்களுக்குப் பின் டாக்டர் புகை பிடித்தவாறு யோசனையில் ஆழ்ந்திருந்தார். அந்த நேரத்தில் கதவைத் திறந்து கொண்டு அலெக்சாண்டர் உள்ளே ஓடி வந்தான். அவன் முகத்தில் மகிழ்ச்சி தாண்டவமாடிக் கொண்டிருந்தது. குதூகலமும் பரபரப்பும் எதிர்பார்த்ததல்லவே!

"டாக்டர், அதிர்ஷ்டம் உங்கள் பக்கத்தில்தான் இருக்கிறது நான் கொடுத்த சிலைக்கு இன்னொரு ஜோடி இருந்தால் நன்றாக இருக்கும் என்று சொன்னேனா? அதைப் போலவே அம்மா ஒன்றை விலைக்கு வாங்கி விட்டாள். இதோ அதைக் கொண்டு வந்திருக்கிறேன். அதோடு சேர்த்து இதையும் வைத்துக் கொள்ளுங்கள். இரண்டும் இருந்தால் நன்றாக இருக்கும்! என் உயிரைக் காப்பாற்றிய உங்களுக்கு இது ஒரு பிரமாதமான பரிசல்ல! இருந்தாலும் மன நிறைவு இருக்கும்..."

—அலெக்சாண்டர் பேசிக் கொண்டே போனான்! டாக்டர் காகிதத்தைப் பிரித்துப் பார்த்தார். உள்ளே வக்கீலுக்கு அவர் கொடுத்த பரிசு பத்திரமாக இருந்தது! ஏதோ சொல்ல வேண்டும் என்று நினைத்தார்...ஆனால் வாய் பேசும் சக்தியை இழந்துவிட்டது...அதனால் அவர் ஒன்றும் சொல்லவில்லை! ❋

பிறைவானம்

"சாமி, இந்த ஏழையைப் பாருங்க சாமி! காலணா கொடுங்க சாமி!..."

எப்போதும் ஏழைகளுக்கே இரக்கம் காட்டும் பத்திரிகைகளில் இந்த சொற்களை அடிக்கடி நீங்கள் படித்திருக்கலாம்; அல்லது சாலையோரங்களில், சந்திக்கும் இடங்களில் இந்தத் 'தாழ்மையான வேண்டுகோளைத் தவறாது கேட்கலாம்.

அப்படித்தான் அன்று பஸ் நிலையத்திலும் அந்தக் குரல் எழும்பியது.

யாருக்குப் பிடிக்கும் அது? 'பேய்க் கூச்சல்'—'சுரம் கெட்ட ஜீதம்'—என்றெல்லா மல்லவா வர்ணிப்பார்கள் 'பெரியவர்கள்'! பஸ் நிலையத்தில் நின்று கொண்டிருந்த அந்த மனிதரும் அப்படித்தான் நினைத்திருக்க வேண்டும்; ஏனெனில் அவர் முகத்தைச் சுளுக்கிக் கொண்டு, எதிரே இருந்த தேர்தல் பாராட்டுக் கூட்ட சுவரொட்டி ஒன்றில் கண்களைப் பதியவைத்துக் கொண்டார். ஆனால், மறுகணம் அவரையும் மீறி சிரிப்பு தோன்றும் அளவுக்கு காலணாவுக்குக் கதறிய அந்தச் சிறுவன், "சாமி, இல்லாட்டி ஒரு 'நாய் பைசா'வாவது கொடுங்க சாமி!" என்றான்.

அந்த மனிதர் சிரித்துவிட்டார். பையிலிருந்து ஒரே ஒரு 'நயா பைசா'வை எடுத்து எறிந்தார். அதைப் பார்த்ததும் அந்தச் சிறுவனும் சிரித்தான்; நடந்தான்.

இந்தக் காட்சியைக் கண்டும் காணாதவனாய், பொங்கி வந்த சிரிப்பை வெளிக்காட்ட மனமில்லாதவன்போல் உட்கார்ந்திருந்தான் மன்னாரு.

எங்கே என்று கேட்கிறீர்களா? பெயரைப் பார்த்தாலே தெரியவில்லை; சமுதாயத்தின் அடித்தளத்திலே உழலும் வர்க்கத்தைச் சேர்ந்தவனாயிற்றே அவன்; அவனுக்கென்ன உப்பரிகையிலேயா இடம் கிடைக்கும்? கைகள் இரண்டையும் கன்னத்திலே இருத்தி "ரிக்ஷா" ஒன்றில் உட்கார்ந்திருந்தான் அவன்!

அவனது அந்தத் தோற்றம் ஏதோ விடை கிடைக்காத பிரச்சினை ஒன்றில் சிக்கிக் கிடக்கிறான் அவன் என்றுதான் சொல்லிக் கொண்டிருந்தது. உண்மை; உண்மை! அவன் தடுமாறி—தவித்து—தத்தளித்து — குழம்பிக் கொண்டுதான் இருந்தான்!

"என்ன செய்வேன், நான்?"

—இதுதான் அவன் தானே எழுப்பிக் கொண்ட கேள்வி! அதற்குத்தான் விடை தேடிக் கொண்டிருந்தான்.

"என்னடா மன்னாரு, நீ பாட்டுக்கு 'ஒக்காஞ்சி'கினு இருக்கே! ஒங்கப்பன் வரலியா 'ரிஸ்கா இஸ்துகினு'ப் போவ? 'இஸ்கூலு' சவாரிகூட விணாப் போவுதேப்பா!"

மன்னாரின் முதுகிலே செல்லமாகத் தட்டி, இப்படி 'தமிழ்' பேசினான் சக ரிக்ஷாவாலா ஒருவன்.

"இல்லேன்னா! ஒனக்குத் தெரியாதா? அப்பன் காயலா விழுந்துப் போச்சி—மூணு நாளாவுது—கஞ்சிக்குக்கூட வழியில்லே! அதான் நான் ரிஸ்காவைப் புடிச்சேன்!..."

மன்னாரு பதில் சொல்லிவிட்டுத் தலையைக் குனிந்து கொண்டான். அவன் கண்களில் வழிந்த கண்ணீரை மற்றவர்கள் பார்த்துவிடக் கூடாதே என்று வெட்கப்பட்டானோ என்னவோ! எப்படி இருந்தால் என்ன; அவன் எதிர்பார்த்த கஞ்சி அந்த சக ரிக்ஷாவாலாவிடமிருந்துகூட கிடைக்கவில்லை!

"ஒனக்கு எங்கேப்பா சவாரி கிடைக்கப்போவுது! இந்த 'சைகிள் ரிஸ்கா'க்காரவனுவ வந்துதான் 'படா பேஜா'ராப் போச்சுதே..." என்று சொல்லிக் கொண்டே நடந்து விட்டான் அவன். உண்மைதானே; மன்னாருவும் காலை முதல்தான் காத்திருக்கிறான். என்ன பலன்? கண்கள் பஞ்சடைந்ததுதான் மிச்சம்!

குடிசையிலே—குடிசையா? மன்னிக்க; மன்னிக்க—ஆலமரத்து நிழலில் சுருண்டு கிடந்த அவன் தந்தையின் பரிதாபகரமான உருவம் அவன் மனக்கண் முன் தோன்றி வதைத்தது. இப்படித் தானே அவன் அம்மாவும் ஒரு காலத்தில் சுருண்டு கிடந்தாள்! பிறகு அவள் எழுந்திருக்கவே இல்லையே! அதைப்போல் தந்தையையும் இழந்து விடுவோமோ? மன்னாருக்கு அதற்குமேல் நினைத்துப் பார்க்க முடியவில்லை.

அவனுக்கு இப்போது தேவை கஞ்சிக்கு சில்லறை! ஆமாம்; அது மட்டும் கிடைத்துவிட்டால், பசி என்றக் கொடியவனிடமிருந்து தன் தந்தையை அவன் காப்பாற்றி விடுவான்! இல்லாவிட்டால்...? மறுகணம் 'ஐயோ' என்று அலற வேண்டும் போலிருந்தது அவனுக்கு!

"தம்பீ..."

ஏதோ அன்போடு அழைப்பதைப்போல் எண்ணிக் கொண்டு ஒரு கரகரத்த குரல் எழும்பியது.

அலறியடித்துக் கொண்டு எழுந்தான் மன்னாரு. எதிரே அந்த மனிதர்—பஸ் நிலையத்தில் நின்று கொண்டிருந்தாரே, அவர்தான் நின்று கொண்டிருந்தார். "என்ன சாமி, ரிக்ஷா வேணுமா?" என்று அவசர அவசரமாகக் கேட்டான் மன்னாரு.

"என்னப்பா, நீ சின்ன பையனா இருக்கியே-வண்டி இழுப்பியா?"

—ஒரு குட்டி யானையின் உருவத்தை ஒத்திருந்த அவருக்கு இந்தச் சந்தேகம் வந்ததில் வியப்பில்லைதான். மன்னாருவும் அவரைக் கொஞ்சம் ஏற இறங்கப் பார்த்தான். பயமாகத்தான் இருந்தது. இருந்தாலும், கஞ்சிக்குக் கதறும் தந்தையின் கூக்குரல் அவன் கழுத்தைப் பிடித்துத் தள்ளியது.

"என்ன சாமி கஷ்டம்; இம்மாம் பெரிய பிள்ளையார் சாமியை, சாதாரண மூஞ்சுறு சுமக்கலியா? நீங்க எங்க போகணும்; சொல்லுங்க!" என்றான் மன்னாரு.

"ஆயிரம் விளக்கு மசூதி கிட்ட போகணும்ப்பா......என்ன கேக்கிறே ?..."

"எட்டணா கொடு சாமி... நிமிஷத்திலே கொண்டுபோய் விட்டுடறேன்!..."

"ஏ அப்பா! எட்டணாவா? மூணு அணா வாங்கிக்க..."

எச்சல் கையைக்கூட சுத்தமாகத் துடைத்துவிட்டு காக்கை ஓட்டும் பண்புள்ளவர் தான் என்பதை நிரூபித்துக்காட்டினார் அவர்.

மன்னாரு இன்னும் கெஞ்சினான். முடிவில் அந்தப் பெரியவர் "நாலணா" என்று முடிவாகச் சொல்லி விட்டார்.

"நாலணாதானா சாமி?" என்றான் மன்னாரு.

"நாலணான்னா இருபத்தஞ்சு நயாபைசா தம்பி, சும்மா இல்லே!" என்று நீட்டி வளைத்துப் பேசினார் அவர்.

"நயா பைசா"

"சரி சாமி, ஏறுங்க..." என்று சொல்லிக் கொண்டே வண்டியை எடுத்தான் மன்னாரு. காலைமுதல் காத்துக்கிடந்த பின் கிடைத்த 'முதல் சவாரி' அல்லவா; ரிக்ஷாவைத் தொட்டுக் கும்பிட்டு விட்டு இழுத்தான்.

பெரிய மனிதர் ஏறி உட்கார்ந்தார். பிள்ளையாரை மூஞ்சுறு சுமப்பது வெறும் சித்திரம்தான்—என்பதை அவன் அப்போது உணர்ந்தான். என்ன செய்வது? முதல் அனுபவம்—அதுவும் இப்படி மூச்சைப் பிடித்திழுக்கும் அளவுக்கு வாய்க்க வேண்டும்! மன்னாரு அவசர அவசரமாக இழுத்துக் கொண்டு நடக்கத்தான் நினைத்தான். தந்தைக்குக் கஞ்சி வார்க்க வேண்டும் என்ற கவலை பயங்கர இருள்போல் கப்பிக் கிடந்தது அவன் நெஞ்சில். ஆனால் வேகம் எப்படி வரும்? மேலே இருப்பது சாதாரணமான உருவமா?

"வேகமா போப்பா..."—அவர் கத்தினார்.

மவுண்ட் ரோட் மோட்டார்களுக்கு இரையாகி விடாமல், மூச்சுத் திணற—முக்கி முனகி—எப்படியோ ஆயிரம் விளக்கு மசூதிக் கருகில் வந்துவிட்டான் மன்னாரு.

'அப்பாடா' என்று சொல்லிக் கொண்டு பெரிய மனிதர் இறங்கினார். பையிலே கையைவிட்டு இருபத்தைந்து புதுக் காசுகளை எடுத்து அவனிடம் கொடுத்தார். எங்கேயோ சென்றுவிட்டார்.

மன்னாரு அவசர அவசரமாக அப்பாவிடம் செல்ல விரும்பி, வண்டியைப் பிடித்த நேரத்தில் என்னவோ திடுக்கிட்டுவிட்டான்., அந்த ரிக்ஷாவில் கிடந்த ஒரு பொருள்தான் அவனை திகைக்க வைத்தது. மறுகணம், மன்னாரு அந்த மனிதர் சென்ற திசையை நோக்கினான். அவர் ஆடிஅசைந்து கொண்டு சென்று கொண்டிருந்தார். "ஐயா......" என்று அழைக்க நினைத்த மன்னாரு 'டக்' கென்று நிறுத்திக் கொண்டான். அவசர அவசரமாக அப்பொருளை எடுத்துத் திறந்தான். மறுகணம் அவன் கண்கள் ஆச்சரியத்தால் அகல விரிந்தன. நாலணாவுக்குத் தவித்துக் கொண்டிருந்தவன் கைகளில் ஒரு மணிபர்ஸ் நிறைய கத்தை ரூபாய் நோட்டுகள் கிடைத்தால்...?

அந்த மனிதர் எங்கேயோ சென்று மறைந்து விட்டார்.

மன்னாரு குழம்பிப்போன நெஞ்சுடன் 'என்ன செய்வது' என்ற யோசனையில் மூழ்கிக் கிடந்தான்.

அப்போது...

அவன் சற்றும் எதிர்பாராத வண்ணம் ஒரு முரட்டுக் கரம் அவன் கையிலிருந்த மணிபர்சை 'கப்'பென்று பறித்தது. மன்னாரு திரும்பினான். "ஏதுடா இது? எங்கே திருடினாய்?" என்று கர்ஜித்தான் எதிரே நின்று கொண்டிருந்த அந்த போலீஸ்காரன்!

மன்னாரு என்ன செய்வான்? "நான் திருடலைங்க..." என்று ஏதோ சொல்ல முடியாமல் தவித்துத் தடுமாறினான்.

"அடப்பாவி! அத்தனையும் கள்ள நோட்டுகள்!...கள்ளநோட்டுகள்! அகப்பட்டுக் கொண்டாயா? நட என்னுடன்..."

போலீஸ்காரன் போட்ட இந்தப் பேரிடியைத் தாங்க முடியாத மன்னாரு "ஐயோ" என்று அலறினான்.

"ஸ்...சப்தம் போடாதே! நட என்னுடன்..." என்று மெதுவாகச் சொல்லிக் கொண்டே அவனை அழைத்தான் போலீஸ்காரன். நடுங்கும் கரங்களால் ரிக்ஷாவை இழுத்துக் கொண்டு நடந்தான் மன்னாரு.

இருவரும் ஒரு சந்துக்குள் நுழைந்தார்கள் "ஏண்டா பாவிப் பயலே! இந்தக் கள்ள நோட்டுகள் உன் கையிலிருக்கிறதைப் பார்த்தால் என்ன நடக்கும் தெரியுமா? முட்டாளே, பதினாறு வருஷம் உன்னை உள்ளே தள்ளிடு

✽ 12-ம் பக்கம் பார்க்க

கடைசிப் பக்கம் எழுத்தாணி

மு. குமரகுரு ; சென்னை-23

(?) தேர்தலில் திராவிடர் கழகத்தாரின் ஆதரவுபெற்ற பச்சைத் தமிழர்கள் யார்? யார்?

காஞ்சீபுரம் சீனுவாசய்யர், சென்னை டி. டி. கிருஷ்ண மாச்சாரி, ஸ்ரீரங்கம் வாசுதேவ அய்யங்கார், பட்டுக்கோட்டை சீனுவாசய்யங்கார், குடந்தை பட்டாபிராம அய்யர், இதுபோன்ற பலரைத் தான் திராவிடக் கழகப் பச்சைத் தமிழர்கள் வரிந்து கட்டிக்கொண்டு ஆதரித்தார்கள்.

க. அன்புத்துரை ;
ஆயக்காரம்புலம்.

(?) காமராசருக்கும் பெரியாருக்குமுள்ள தொடர்பு எந்தச் சங்கிலியால் பிணைக்கப்பட்டிருக்கிறது?

பெரியார் கரங்களில் இரும்புச் சங்கிலி பூட்டி அதைப் பலப் படுத்திக் கொள்ளப் பார்க்கிறார், வழக்கு தொடர்ந்திருக்கும் காமராசர்!

வி. ஆளவந்தான் ; காஞ்சி.

(?) இப்போது அமைச்சர்களை ஆட்கொண்டிருக்கும் பிரச்சினை என்ன?

தங்களில் யாருக்குப் பதவி நிலைக்கும் என்கிற ஒரே பிரச்சினை தான்!

கருணைக் கண் ; போகளூர்.

(?) உங்களை வசை பாடிக் கொண்டிருக்கும் ஒருவரை நீங்கள் 'எங்கள் தந்தை' எனக் கூறி வருவது ஏன்?

அப்படிப்பட்டவரைத் தந்தையாகப் பெற்றமைக்கு நாங்கள் வெட்கப்படவில்லை என்று காட்டிக் கொள்வதற்குத்தான்!

(?) நம்மையெல்லாம் பார்த்து தேசத்துரோகிகள் என்று வசை பாடுகிறாரமே, ஒரு அமைச்சர்!

நாம் தேசத்துரோகிகள் என்றால் அவரது பக்கத்திலே இருக்கிற மாணிக்கவேலர்; ராமசாமிப் படையாச்சி; ராஜா சர். முத்தையா செட்டியார்; டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் — இவர்களெல்லாம் யாராம்?

ஓ. ஆர். சிவப்பிரகாசம் ;
பேர்ணம்பட்டு.

(?) தேர்தலுக்குப் பிறகு தி. க. வின் கொள்கை என்ன?

ஏதாவது ஒரு 'கொள்கை'யைத் தேடிப் பிடித்து ஒட்டிக் கொள்வதுதான்!

அபிசீனிய அடிமை...

✻ 8-ம் பக்கத் தொடர்ச்சி

"சரி பீகம்...அல்லா உதவி செய்வார்..."

சயத்கான், பீகத்தின் கட்டளையை நிறைவேற்றுவதற்காக வெளியேறினன். அன்றிரவு பீகம் ருசியா நிம்மதியாகத் தூங்கினாள்.

* * *

மறுநாள் காலை.

ருசியாவை எழுப்ப யாகூத்தே வந்தான்.

"பீகம், பல்லக்குகள் தயாராகி விட்டன. புறப்படுங்கள்; ஆனால் அதற்கு முன் நீங்கள் எனக்குச் செய்ய வேண்டிய உதவி யொன்றிருக்கிறது...... பமீயாவை எங்கு அடைத்து வைத்திருக்கிறீர்கள் என்ற விவரமும், அந்த சிறைக்குரிய சாவியும் வேண்டும்..."

"யாகூத், என் வேண்டுகோளை நீ நிராகரித்தாலும் நெருக்கடியான இந்த சந்தர்ப்பத்தில் உன் கோரிக்கையை நான் நிறைவேற்றத்தான் போகிறேன்," என்று கூறிக் கொண்டே, சாவிக் கொத்து ஒன்றை அவன் முன் வீசியெறிந்தாள். "இதில் டெல்லி பாதாளச் சிறையின் சாவிகள் உள்ளன. பமீயாவை விடுவித்து அவளை என் பரிசாக நீ ஏற்றுக் கொள்...என் ஆசி உங்களுக்கு எப்பொழுதும் உண்டு. ஆனால் யாகூத், ஒன்றை மட்டும் மறந்து விடாதே! அரசியின் பெருந்தன்மைதான் அடிமை யாகூத்தை ஓம்ராவாக்கியது. ஆனால் யாகூத் பதவி உயர்ந்தாலும் அடிமைப் புத்தி மாறாமலே யிருந்தான் என்றுதான் வரலாறு உன்னைப் பற்றிப் பேசும்..." என்று வார்த்தைகளைப் பொழிந்தாள் பீகம்.

யாகூத்திற்குக் கோபம் கொப்பளித்தாலும், பமீயாவின் விடுதலைச் சாசனமான சாவி கையில் கிடைத்தவுடன், மகிழ்ச்சி பொங்க, பமீயாவைப் பார்க்கும் ஆவலில் டெல்லி புறப்படத் தயாரானன்.

(தொடரும்)

பிறைவானம்

★ முன் பக்கத் தொடர்ச்சி

வானுங்க—தெரியுமா?" என்றான் போலீஸ்காரன்.

அந்தக் குற்றத்தின் தன்மை பற்றியோ—தண்டனை பற்றியோ மன்னாருக்கு என்ன தெரியும்? தந்தை 'பசி, பசி' என்று புலம்பிக் கொண்டிருக்கிறார்; தன் கையில் நாலணா கிடைத்து விட்டது; தப்பி விட்டால் போதும்-இதுதான் அவனது ஒரே சிந்தனை.

"ஐயா, உங்கள் காலிலே விழுந்து கெஞ்சுறேன்! என்னை விட்டுடுங்க...நான் ஓடியே போயிடுறேன்!..." என்று கெஞ்சினான். 'ஓ' வென்று அழ ஆரம்பித்து விட்டான்.

"சரி, சரி! யாராவது பார்த்துடப் போறானுங்க...ஓடு முதல்ல இந்த இடத்தைவிட்டு..." என்று அவனைத் துரிதப்படுத்தினன் போலீஸ்காரன்!

மன்னாரு புறப்படத் தயாரானன். வண்டியை இழுத்துக் கொண்டு நகர்ந்தான்.

"டேய், நில்லுடா கொஞ்சம்!" என்றான் மீண்டும் அந்தப் போலீஸ்காரன்.

பயந்து கொண்டே திரும்பினன் மன்னாரு.

"கையிலே என்ன சில்லரை? கொண்டா இங்கே, வெத்திலை சீவல் செலவுக்கு..."

'திகில்' என்றது மன்னாருக்கு! "ஐயா! அது என் அப்பனுக்கு..."

—மன்னாரு முடிக்கவில்லை. "அப்பனுக்காவது; மாமனுக்காவது! இல்லே உள்ளே தள்ளிப்பிடுவேன் ஜாக்கிரதை!" என்று உறுமிக் கொண்டே அவன் கையில் வியர்வையில் புதைந்து கிடந்த இருபத்தைந்து புதிய காசுகளையும் பறித்துக் கொண்டான்!

மன்னாருக்கு மனம் விட்டுக் கதறி அழ வேண்டும் போலிருந்தது.

பேசாமல் ரிக்ஷாவை இழுத்துக் கொண்டு நடந்தான்.

○

மாலை நேரம்!

பழைய பஸ் நிலையத்திற்கு அருகிலேயே ரிக்ஷாவை நிறுத்திக் கொண்டு 'சவாரி'க்குக் காத்துக் கிடந்தான் மன்னாரு.

சவாரி கிடைக்காதா என்ற சஞ்சலத்தோடு— நீர் திரையிட்டிருந்த அவனது கண்கள் கையில் கத்தை ரூபாய்நோட்டுகள்துள்ள,மகிழ்ச்சியோடு ஹோட்டலுக்குள் நுழைந்து கொண்டிருந்த அந்த போலீஸ்காரனை அடையாளங் கண்டு கொள்ளவில்லை! அப்படிக் கண்டு கொண்டிருந்தால், அந்த இருபத்தைந்து நயா பைசாக்களையாவது கெஞ்சிக் கதறி வாங்கிவிடலாமே, மன்னாரு!

—சொர்ணம்.

ஏப்ரல் 10-ம் நாள்
விற்பனைக்குக் கிடைக்கும்!

முத்தாரம்

இது ஒரு இலக்கியக் கருவூலம்;
சிறுகதைச் செல்வம்;
சிந்தனைச் சித்திரம்-எனச்
சொல்லத்தக்க செந்தமிழ் மாத ஏடு!

முத்தாரம்

உள்ளம் உருக்கும் மொழிபெயர்ப்புக் கதைகள்!
உவகை தரும் கேலிச் சித்திரங்கள்!
கற்பனைக்கு விருந்தளிக்கும் துணுக்குகள்!
ஓவியங்கள் நிறைந்த காவியத் தொகுப்பு!

முத்தாரம்

ஆசிரியர் மு. க. வின் கவிதை நடைச் சிறுகதை உண்டு!
உங்கள் பிரதிக்கு இன்றே விற்பனையாளர்களிடம் சொல்லி வையுங்கள்!

ஆசிரியரும், அச்சிடுபவரும், வெளியிடுபவரும் மு. கருணாநிதி, 'முரசொலி' அச்சகம், 4-128, மவுண்ட்ரோடு, சென்னை-6, தமிழ்நாடு